JUNE. 1914. உ Reg. No. M. 1080.

சிவமயம்.

# தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

# TAMILIAN.

## A Monthly Tamil Journal.

*Pandit, S. Muthuswami Pillai, Managing Editor.*

Vol. II. | 1089 வைகாசி | No. 9.

பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| 1. மாதசரிதம் ... ... | 257 |
| 2. சமயம் ... ... | 258 |
| 3. நாமுட்கொள்ளும் ஆகாரம்:— ஜீர்ணம் ... ... | 265 |
| 4. சிசு விவாகம் ... ... | 268 |
| 5. மனிதர் நிலைமை மாற்றம் ... ... | 271 |
| 6. வியாபாரம் ... .. | 275 |
| 7. கடவுள் ... ... | 278 |
| 8. கடல் ... ... | 281 |
| 9. சமாசாரத்திரட்டு ... ... ... | 233 |


Printed at the 'BHASKARA' PRESS, and
Published by S. Muthuswami Pillai, Trivandrum.

## ரோஜா.

சீருலாவிய செந்தமிழ் பரவும் இப்பரதகண்டத்தில் வசிக்கும் புத்திர புத்திரிகளின் மனதைச் சீர்திருத்தவும் புருஷனுக்கும் மனைவிக்கு மிருக்கவேண்டிய மனோரஞ்மியத்தை அவர்கள் மனதில் புகட்டவும் இப்புத்தகம் இன்றியமையாதது.

இதில் விளங்குவதெல்லாம் படிப்பவர் நாவிற்கு நயமும், கேட்பவர் காதிற்கு இன்பமும், மனதிற்கு உற்சாகமும் தருவதுடன் அறிவை விருத்தியாக்கி மாதர்கட்கு ஊழ்வினைசம்பந்தமே முதற்காரணமாயிருந்து சுகதுக்கமுண்டாகுமென்பதுணராமல் துக்கமுண்டாகுங்காலே கடவுளை தூஷித்து வீணிற் பழிசுமப்பதடாத வழியெனக் கற்றுணர்ந்த கவிஞர்கள் புகலும் நீதி சாஸ்திர மனைத்தும் இன்னும் அநேக இன்றியமையா விஷயங்களையும் சேர்த்துக் கடிதங்களாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 8. தபாற்கூலி பிரத்தியேகம்

## ஆநந்த மகிளா.

இப்புஸ்தகம் அநேக படங்களடங்கியது.

விலை தபால் சார்ஜ் உள்பட ரூபாய் 1.

இது மானிட உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதமெனும் சஞ்சீவியேயாகும். ஹிந்து ஸ்திரீ புருஷர்களுக்கு பிரியத்தையும் சந்தோஷத்தையுங் கொடுக்கத்தக்கது. ஸ்திரீ புருஷ சம்பந்தமான சாஸ்திரங்களையும் சரீர கோட்பாட்டையும் பூர்வத்தில் ஆரியர்கள் அனுஷ்டித்து வந்த முறையை இப்புஸ்தகம் விவரித்துச் சொல்வதோடு கூட ஆண் பெண் இவ்விரண்டு ஜாதியும் ஒருவரையொருவர் தமது இஷ்டப்பிரகாரம் சந்தோஷ சல்லாபஞ் செய்துகொள்ளும் விதத்தையுந் தெளிவாய் எடுத்துரைப்பது. மூன்று புஸ்தகங்களுக்கு ஒரு புஸ்தகம் இனாம்

**P. S. Roy**
PONDICHERRY.

தமிழன் சந்தாவிவரம்.

| | ரூ | அ | பை. |
|---|---|---|---|
| போஷகர்களுக்கு | 4 | 0 | 0 |
| சந்தாதாரக்கு | 2 | 0 | |
| பினாங்கு சிங்கப்பூர்முதலிய வெளிநாடுகளுக்கு | 3 | 0 | ,, |

குறிப்பு, (1) முதல் ஆறு மாதங்களுக்குள் ஒரு வருஷ சந்தா முன்னதாகச்செலுத்தும் சந்தாதார்க்கும் போஷகர்களுக்கும் 8 அணா விலையுள்ள "கற்பகவல்லி" என்னும் நாவல் ஒரு பிரதி இனாமாகக்கொடுக்கப்படும்.

Pandit S. Muthuswami Pillai. Managing Editor
The "TAMILIAN" Trivandrum.

உ

சிவமயம்.

# தமிழன்.

---

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு"—குறள்.

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை—பத்திராதிபர்.

தொகுதி II } 1089. வைகாசி மீ { பகுதி IX

## மாதசரிதம்.

### ஒரு விண்ணப்பம்.

அன்புள்ள ஐயா!

வந்தனம். இது காறும் தமிழனை ஆதரித்து வருவதற்காக மிக நன்றி பாராட்டுகிறேன். தமிழன் விஷயமாக வருகிற ஆவணி மாத முதல் நான் செய்ய உத்தேசித்திருக்கும் சீர் திருத்தங்களை, சென்ற சித்திரை மாதப்பத்திரிகையில் தாங்கள் வாசித்தறிந்திருப்பீர்களே தங்களைப்போன்ற கனவான்களின் உதவியின்றி என் எண்ணங்கள் ஒன்றுமே நிறைவேறா. ஆதலின் இத்துடன் அனுப்பும் ஆர்டர் பாரம் இரண்டிலும் தங்கள் சிநேகிதர்களில் நல்லவர்களான இருவரைக் கொண்டு கையொப்பஞ்செய்வித்து ஆடி—மீ 15—உக்குள் எனக்கு அனுப்ப வேண்டுகிறேன். அப்படிச் செய்கிறதாயிருந்தால் அந்த சிரமத்துக்காக ஒரு ரூபா விலையுள்ள

**வரதசுந்தரம்.**

என்ற அழகான துப்பறியும் நாவல் இனமாகத் தங்களுக்கு அனுப்பப்படும். ஒருவரைக்கொண்டு மட்டும் கையொப்பஞ்செய்து அனுப்பினால் 8-அணு விலையுள்ள

**ஞானசுந்தரம்.**

என்ற அழகிய நாவல் இனமளிக்கப்படும். இது ஒன்றுமே செய்யா

மலிருந்தாலும் எல்லா சந்தாதார்களுக்கும், ஆவணி மாதத்தில் சந்தாத் தொகை செலுத்துகிறதாயிருந்தால் 8 அணு விலையுள்ள

திருவாசகம் அல்லது ஞானசுந்தரம்

ஒரு பிரதி இனும் கொடுக்கப்படும். நீங்கள் நூதனமாகச் சேர்த்த னுப்பும் சந்தா நேயர்களுக்கும் 8-அணு விலையுள்ள திருவாசகமோ 8-அணு விலையுள்ள ஞானசுந்தரமோ இனும் கொடுக்கப்படும்.

என் விருப்பப்படி இரண்டு சந்தாதாரிடம் கையொப்பம் வாங்கி அனுப்பினல் தாங்கள் கொடுக்கும் தமிழன் சந்தா ரூபாய் இரண்டுக் கும் ஒரு வருஷத்துக்குத் தமிழன் பத்திரிகையும் ரூபாய் 1—8 விலை யுள்ள இரண்டு புத்தகங்களும் இலகுவாகக் கிடைப்பதைத் தங்களுக் குப்பின்னும் அறிவுறுத்துகிறேன்.

இத்தருணத்தை வீணுக்காது இச்சிறு உதவி புரிந்து என்னை ஆதரிக்கத் தவறீர்களென்று பூரணமாய் நம்புகிறேன்.

பத்திராதிபர்.

---

## சமயம்.

ஸ்ரீமாந், C. S. இராமலிங்கம்பிள்ளையவர்கள்.

---

'சமயம்' என்றாலென்ன?

அருள் வேதங்களென்று சொல்லப்படும் புத்தகங்களின் ஏற்றத் தாழ்ச்சிகளைப்பற்றிப் பேசுவதுதான் சமயமா? அன்றி மத்தேயு எழு தின சுவிசேஷத்திற் கூறப்பட்டவை ஜானெழுதிய சுவிசேஷத்திற் கூறப்பட்டிருக்கிறதா? ஜானெழுதிய சுவிசேஷத்திற் கூறப்பட்டவை லூக்கா எழுதிய சுவிசேஷத்திற் கூறப்பட்டிருக்கிறதா? என்ற இவ் வாறுய ஆராய்ச்சிகள் செய்யப்படுவதுதான் சமயமா? அன்றி ஒருவன் ஒருவீட்டில் களவு செய்ய எத்தனித்து வீட்டினுள் நுழைய அவ்வீட்டு க்காரன் அவன் வந்த செய்தியையறிந்து தன்னுல் அவனை இரவு முழு வதும் காக்கமுடியாதெனக் கருதி அவன் மூக்கை ஒரு கத்தியால் அரிந்துவிட்டால் நாளை அவன் வெளியில் வரும்போது கண்டு பிடித் துக்கொள்ளலாமென்று நினைத்து அவன் மூக்கை அரிய, அவனந்த நன்னிருளிலேயே தன் வெள்ளை வஸ்திரத்தைக் காவி வஸ்திரமாக்கிக் கொண்டு காட்டிற்குச் சென்று, ஆங்கு தனக்குச்சொந்தமில்லாத பிறர் தோட்டங்களிலுள்ள காய்கனிகளைப் பறித்துத் தின்பதும் யாராவது

ஒருவர் வருவது கண்டால் திடீரெனக் கீழே உட்கார்ந்து கண்ணை மூடித் தியானத்திலிருப்பதுமாய்ப் பாசாங்குபண்ணிக்கொண்டிருக்க உலகத்தார் அவனை ஓர் மௌனச்சாமியென்று கருதி வெகு மரியாதைகள் செய்ததாய்க் கூறும் கதைக்கொப்ப முற்றுந்துறந்த முனிவரைப்போல் வெள்ளை வஸ்திரத்தைக் காவி வஸ்திரமாக மாற்றிக்கொள்வது தான் சமயாநுஷ்டானமா? அன்று! அன்று! பின் சமயமென்றுலெனையோவெனின் நாம் வசிக்கும் இப்பிரபஞ்சப் பொருளினுண்மையை ஆராய்ந்து இதன் உற்பத்திக்குக் காரணமாய் நின்று இதனை ஆண்டுவருகிறவரான கடவுளைப் பற்றிக் கிடத்தலும், அதனின்று நமக்குண்டாகு மெய்யுணர்வுமேயாம்.

சிலர் நாம் வசிக்கும் இப்பிரபஞ்சமும் இதனைப்பற்றிச் சொல்லும் Science என்னும் சாஸ்திரமுமேதான் சமயமென்கின்றனர். Modern Scientists என்னும் தற்கால சாஸ்திரிகள் கடவுளுக்கு இவ்வுலகத்தில் ஒரு சிறு இடங்கூடக் கொடுத்தார்களில்லை. அந்தோ! பாவம்! கடவுள் தான் என்செய்வார்! சரீரத்திற்கு வேறாய் ஆன்மா இல்லை யெனவும் வாதிக்கும் இவர்களே நாஸ்திகர் எனப்படுவர்.

இனி, சமயமென்பதைப்பற்றி உலகத்தார்க்குள் இருக்கும் அபிப்பிராய பேதங்கள் இவ்வாறாகவிருக்க சமயம் மனிதர்க்கு இன்றியமையாததா, என்னும் விஷயத்தைக்குறித்துச் சிறிது ஆராய்வோம். சிலர் உயிர்களிடத்துக் கருணையும் நல்லொழுக்கமுமே சமயமெனக் கருதுகின்றனர். தான் ஒரு பெரிய இராஜ்யத்திற்கு அரசனாயிருந்தும் அதனையுமொரு பொருட்டா யெண்ணாது அழகிற் சிறந்த தன் மனைவியையும் இவ்வுலகத்திற் கிடைப்பதற்கரிய புத்திரனையும் பொருளாகக்கருதாது எல்லாவற்றையுந்துறந்து காட்டிற்குச் சென்று அரிய தவத்தைச்செய்த கௌதம புத்தரின் கொள்கையு மிதுவேயாகும். உண்மையான சமயாநுஷ்டானத்தினாற் கிடைக்கும் தெய்வத் திருவருளும் பேரின்ப நிலையும் மேற்கூறப்பட்ட சமயங்களை நாம் கைக்கொள்வதினால் கைகூடாது போனாலும் அவை இவ்வுலகத்திற்குப் பெரிதும் நன்மையையே விளைக்குமென்பதிற் சந்தேகம் சிறிதுமில்லை. பேதைக் குணமுள்ள பிராணிகளையும், அந்தோ! சிசுக்களையுங்கூடப் பலிகொடுத்து தங்களுக்கு நன்மை கிடைக்கும்படி கடவுளை வேண்டுவோரும் தங்கள் மதமே மேலான மதமென்று புகழ்ந்துகொள்வதினால் மேற்கூறிய மதங்கள் மிகவும் மேன்மையற்றனவேயாகும்.

எம்மதம் ஜனங்களுக்கு நற்பழக்கத்தையும், நல்லொழுக்கத்தையும் கைக்கொண்டொழுகுவதற்குச் சாதனமாயுள்ளதோ அம்மதமே பெரும்பான்மையும் மேலான மதமாகக் கருதப்படுகிறது. எனினும் ஒரு சமயத்தினுண்மையான இலட்சணங்கள் இவைமட்டுமல்லவென்று சொல்ல தெய்வபக்தியுடையா ரெவரும் பின்வாங்கார். உலகத்தில் பெரும்பாலராலும் மேற்கூறியவைகளே சமயக் கொள்கைகளென்றெண்ணிப் பேசிக்கொள்ளப்படுவதை நாம் கண்டும் கேட்டுமிருக்கின்றோம்.

திரிகாலமும் ஸ்நானஞ்செய்து உடம்பெங்கும் வெட்டையின்றி விபூதிபூசி உருத்திராக்க வடங்களை ஒன்றின் மேலொன்றாயணிந்து முன்னே சிவலிங்கமும், பக்கத்திலே புஷ்பக்குடலையும் கையிலே பத்திர புஷ்பமும் வாயிலே "கல்லாப் பிழையுங் கருதாப் பிழையும்...etc எல்லாப் பிழையும் பொறுத்தருள்வா யிறைவா கச்சியேகம்பனே" என்ற தேவாரமும் இடையிடையே நாமிங்கு சொல்லத்தகாத சிலவசனங்களும் சொல்லிக்கொண்டு தங்கள் பூசையை ஓர் கடனாகச்செய்யும் சிலருமுளர். அந்தோ இவர் தம்பூசை எப்பயனுடைத்து? இத்தகையோர் பூசையெல்லாம் உண்மையான தெய்வ வழிபாட்டிற்குரிய இலட்சணங்களாகாவிடினும் அவர்தம் திரிகால ஸ்நானமும், விபூதிப்பூச்சும் உருத்திராக்க வடமாலையணிதலும் சுகாதாரத்திற்கு மிகவும் ஏற்றவையேயாகும். இவ்வுண்மை அவர்கள் திடகாத்திர தேகமுடையோரா யிருத்தலினாலேயே நன்கு விளங்கும்.

இத்துடன் ஸ்தலங்களுக்கு யாத்திரைபோவதினாலும் "ஆங்காலமெல்லாம் அநியாயஞ்செய்து சாங்காலத்து சங்கரா சங்கரா" என்றாற்போல் உள்ள நாளெல்லாம் கள்ளமும், கபடும், பொய்யும், புலையுமுடையோராயினும், கடைசியில் காசி, கன்னியாகுமாரி, இராமேஸ்வரம் முதலிய தீர்த்த ஸ்தலங்களில்போய் ஸ்நானம் செய்வதாலும், தங்கள் பாபமெல்லாம் போம் மேலானபதவி கிடைத்து விடுமெனவெண்ணிக்கொள்வாருமுளர். இவர்களபிப்பிராயம் உண்மையேயெனின் அஃது அறிவுடைய பலராலும் ஒப்புக் கொள்ளப் படல்வேண்டும். அப்படிக்கின்றி நமது தென்னாட்டிலுள்ளார் கண்ணுக்கெட்டாத்தூரத்திலிருக்கும் காசி முதலிய க்ஷேத்திரங்களே தெய்வத்தன்மை விசேஷமாய் பொருந்தியதென்றும், கங்கா தீர்த்தமே நமது பாபத்தைக் கழுவித் துடைத்துவிடும் பெருமையுடையதென்றும்; காசியிலுள்ள நமது சகோதரர் வேணுவன க்ஷேத்திரமாகிய நமது நெல்லையம்பதியே

விசேஷ ஸ்தலமென்றும், நம் தாம்பிரவர்ணியே சிறந்த தீர்த்தமென்றும், எண்ணிக்கொண்டு இவர்களங்கும் அவர்களிங்குமாய் அலைந்து திரிவதை நாம் பிரத்தியக்ஷத்தில் காண்கின்றோம்.

இனி நம்மில் வழங்கும் 'புத்திரன்' என்னும் சொல்லைக்குறித்து சிறிது ஆராய்தல் வேண்டும். ஒரு பிள்ளை தன் தகப்பனைப் 'புத்' என்னும் நரகத்திற் கிடந்து அழுந்தவொட்டாது தடுக்கு மாற்றலுடையோனை நல் 'புத்திர'னெனப்படுகிறானென்னனச் சில நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றது. இதனால் எவன் எக்கேடு கெட்டாவது ஏதானுமொரு வழியில் தனக்கு ஒரு பிள்ளை கிடைக்கப்பற்றால் அதுவே அவனுக்கு மோட்சத்தை அளிக்குமென்று தெரிகிறது. அக்காலத்திருந்ததாகக் கேள்விப்படும் முற்றுந்துறந்த முனிவர்கட்கெல்லாம் இவ்வழி ஏனோ தெரியாமற் போயிற்று? அவர்கள் ஊணுறக்கமின்றி அரிய தவங்களைச் செய்து உடலையும் வருத்திப் பலவாறு துன்பப்பட்டு உழன்றதெல்லாம் வீண் முயற்சிகளோ? அந்தோ! மோட்சமென்ன அவ்வளவு எளிதிற் கிடைக்கக் கூடியதா? இத்தகைய அபிப்பிராயம் இக்காலத்தி லுள்ளார்க்கு மில்லாமற் போகவில்லை.

ஒவ்வொருவரும் அநேகமாய் இறந்துபோன தன் மூதாதையர்க்கு 'வீடு' கொடுக்க வருடந்தோறும் ஏற்பாடு செய்துகொண்டேயிருக்கின்றனர். இஃதன்றியு மிதனினும் சுலபமானவழி யொன்றிருப்பதாய்க் கேள்வி. கங்கைக் கரையில், நமது தாய்தந்தையர் முதலிய பெரியார் இவ்வுலகத்திலிருந்தாலுமே அவர்களை உத்தேசித்து தர்ப்பையைத் தகித்து அந்தச் சாம்பலையுங் கரைத்து பிண்டமுமளித்துமற்றும் கிரியைகளையும் சரிவர ஒழுங்காய்ச் செய்துவிட்டால் அதுவே அவர்கள் முக்தியடைவதற்கான வழியென்று நம்பி அவ்விதம் செய்வாருமுளர். இவர்கள் யாரை உத்தேசித்து மேற்சொல்லிய கிரியைகளைச் செய்கிறார்களோ அவர்கள் உயிரோடிருந்தபோதும் மோட்சமென்று சொல்லப்படுமிடத்தில் அவர்கள் பெயர் பதியப்பட்டு இடமொளித்து வைக்கப்படும்போலும்? இவ்விதஞ் செய்துமுடித்த ஒருவர் பிற்காலத்தில் தம் தாய் தந்தையரை இழக்க நேரிடும்போது நாமிங்கு சாதாரணமாய்ச் செய்யவேண்டிய கிரியைகளொன்றும் செய்யவேண்டியதில்லையாம். வருடா வருடம் செய்வது பணச் செலவும் தொல்லையுந்தானே? பிற்காலத்தில் தமது சந்ததியாரொவ்வொருவரும் திரேக சௌக்கிய முடையவராயும் இழந்துபோன தங்கள்

தாய் தந்தையர் முதலிய மூதாதையரிடத்து என்றும் மறவாத அன்புடையோராயுமிருக்க வேண்டுமென்றெண்ணி நமது முன்னோர்செய்த சூழ்ச்சியை அறியாது இவ்வித விபரீத அர்த்தம் செய்துகொண்டு ஊரூராய் அலைந்து திரிந்து தங்கள் மனம்போன வழியெல்லாம் சென்று பாவமிது புண்ணியமிது என்று தெரியாமல் மயங்கிக்கொண்டிருப்பதவரது ஆராய்ச்சியின்மையைக் குறிக்குமேயன்றி வேறல்ல. இது நிற்க.

மேற்கூறியபடி ஸ்தல யாத்திரை முதலியவற்றால் ஜனங்களுக்கு ஐக்கியம் நல்லொழுக்கம் நற்பழக்கம் முவலியன கற்பிக்கப் படுவதால் சுகத்தையும், ஸ்நானபானாதி வெளிக்கிரியைகள் சுகாதார சம்பந்தமாயிருப்பதால் அவை ஒவ்வொருவருக்கும் திரேக ஆரோக்கியத்தையும் கொடுப்பதற்கு ஏதுவாயிருப்பனவும் ஜனங்களாலநுஷ்டிக்கப்படுவதுமான மேற்கூறப்பட்ட சமயங்கள் ஒருவாறு இன்றியமையாதனவேயாகும். என்றாலும் உண்மைச் சமயாநுஷ்டானத்தினால் பெறக்கூடிய நன்மைகளிலவை ஒன்றேனுமளிக்காவென்பது அறிவுடையோரெவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதே.

மனிதன் எப்பொழுதும் தன் சுய நலத்திலேயே நாட்டமுடையோனாயிருக்கிறான். மற்றொருவர் தனக்குத்துன்பம் செய்யக்கருதினும் சகியான். அப்படித் துன்பஞ்செய்பவர்கள் தன்னிலும் தாழ்ந்த சக்தியுடையோராயிருந்தால் அவர்களைக் கொல்லாமற் கொன்றுவிடுவான். அவர்கள் தன்னினும் வலிமையுடையோரா யிருந்தாலோ அவர்களது தயவைத்தேடிக் கொள்ள முயலுவான். இவ்விதஞ்செய்வது மனிதரது இயற்கைக்குணம். இவ்வித இயற்கைக்குணமுள்ளமனிதன் சிற்சில காலங்களில்தான் காணும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு பயப்படவும் அதனால் துன்பப்படவும் நேரிடும். உதாரணமாக: மழைகாலத்து நள்ளிரவில் நிர்மாநுஷியமான காட்டுவழி ஒரு மனிதன் தனிமையாய்ப் போய்க்கொண்டிருக்கையில் தன் தலைக்குமேல் பயங்கரமாக கர்ச்சித்துக்கொண்டிருக்கும் இடியின் குமுறலையும் தன்கண்ணை வெட்டும் மின்னலொளியையும் கேட்கவும் காணவும் நேரிடுமாயின் அவன் மனமெவ்விதமிருக்குமென்று நாமெண்ணிக்கொள்வது? நிச்சயமாக அவன் திகிலடைந்தேயிருப்பான். இவ்விதமாக இயற்கைச் சம்பவங்களில் பழகப்பழகத் தனக்குத் தெரியாததும் தன்னிலும் வலிமையுடைதுமான ஓர் பெருஞ்சக்தியிருக்கிறதென்று எண்ணு

வது சகஜந்தானே? அப்படி எண்ணிய அவனைப்போன்ற நுண்ணறிவுடைய பலர் ஆராய்ச்சியின்வழி இப்பிரபஞ்சத்திற்குக் கர்த்தா ஒருவர் உண்டென்னு முண்மை வெளியாயிருத்தல் வேண்டும். ஆகையால் மனிதர் கடவுள் ஒருவர் உண்டென்ற நம்பிக்கையுடையரா யிருப்பது அவருக்கு இயற்கையாயமைந்திருக்கும் அறிவின் அபிவிர்த்தியின் பயனேயாகும். அத்தகைய கடவுள் அளவில்லாத ஆற்றலும் மகிமையும் உயிர்களிடத்து அளவிறந்த கருணையும் உடையவரென்பது நாமொவ்வொருவரும் நமது அநுபவத்தில் கண்டு தெரியலாம். நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களெல்லாம் குறைவின்றிக் கிடைக்கும்படி செய்வித்து மழைபெய்யவேண்டிய காலத்துப் பெய்வித்து நம்மைச் சந்தோஷிப்பித்தற்குக் காரணனான நமது சூரியன் இப்பிரபஞ்சசிருஷ்டியின் ஒரணுவுக்கும் ஈடாகானெனில் அதைப்படைத்த கடவுளின் வல்லமையை நாமெங்ஙனம் அளவிடுவது! இவ்விதம் சர்வவல்லமையும் சர்வாதிகாரமுமுள்ள கடவுள் எல்லாவற்றிற்கும் மேலான ஒரு தனித்தலைவனுவான். அவனே உயிர்கட்கெல்லாம் பரம பிதா. நாமெல்லாரும் அவன் பிள்ளைகளாதலால் சகோதரர்களே. அவன் சந்நிதானத்தில், வலியர், எளியர், சிறியர், பெரியர், பகைவர், உறினர் பிராமிணர், சூத்திரர், என்ற பேதா பேதங்கிடையாது. ஒவ்வோர் உயிரும் மற்றெவ்வுயிர்களிடத்தும் கருணை பாராட்டி, கொலைகளவாதி துர்க்கிருத்தியங்களை ஒழித்து நல்வழிப்படல் வேண்டுமென்பதே அவன் திருவுள்ளம்.

மக்களுக்குள் பட்சபாதமு முண்டோ? நாம் சிற்றறிவுடையோரென்பது தெரிந்தே நமதறிவிற்கறிவாய் அவன் நின்று உணர்த்திக் கொண்டேயிருக்கிறுன். அதன்படி நாம் நடக்கத் தவறினோமானுல் நாமே நமக்குக் கேடு விளைத்துக் கொள்ளுகிறவர்களாவோம்.

> " வெண்ணைக்கட்டியும் சீனியும் ஊட்டலாம்
> விக்கிக்கொள்வதற் கென் செயலாம் "

என்றபடி அவன் நமக்கு நன் மதி புகட்டிக்கொண்டேயிருந்தும் அவ்விதம் நடவாது அதற்குமாருய் நாம் மனம்போனபோக்கில் அலைந்து துன்பப்படுவோமானுல் அத்தெய்வந்தான் என்செய்யும்! தெய்வத்தை "கண்ணற்ற தெய்வமே உனக்கு ஈவிரக்கமென்பது கிடையாதா"? என வருந்தினுல் பயனென்ன? ஒன்றுமில்லையே ஆகையால் அவர் நமக்கு மனச்சாட்சி மூலமாய் அறிவுறுத்துகிறபடிநடந்து கொள்வதே நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

அவ்விதம் நடத்தலே நமக்கு வேண்டிய இம்மை மறுமைக்குரிய சுகங்களை எளிதில் நாமடையும்படி கூட்டுவிக்கும்.

கடைசியாய் நமக்கு திரேக சௌக்கியத்தையும் ஜீவகாருண்யத்தையும் உண்டுபண்ணி நம்மை நல்லொழுக்கமும் நற்பழக்கமும் உடையோராகச் செய்வதற்கு அநுகூலமான சிலகொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்கவேண்டியது இன்றியமையாத தாகவேயிருக்கிறது.

உலகத்தில் தற்காலத்திலுள்ள எண்ணிறந்த சமயங்களின் பொது நோக்கம் ஒன்றேயாயினும் அவைகளுக்குள் ஒன்றுக்கொன்று முரண்படுகிற கொள்கைகள் பலவிருப்பது நாமனைவரும் அறிந்தவிஷயமே. எனினும் ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் தங்கள் சமயமே கடவுளால் அருளப்பட்டதென்றும் அதுவே மோக்ஷத்திற்கு நேரான வழியென்றும் ஏனைய சமயங்களெல்லாம மனிதரால் ஆக்கப்பட்டவை என்றும் பிறவும் பேசிக்கொள்ளுகின்றனர். இதனுண்மையைச் சற்று தெளியவேண்டயது அவசியமாயிருக்கிறது. உண்மையில் ஏதாவது ஒரு மதம் கடவுளால் அளிக்கப்பட்டிருக்குமானால் அது உலகத்திலுள்ள யாவராலும் நிராக்ஷேபனையின்றி அநுஷ்டிக்கப்படல் வேண்டும். கடவுளின் நியமனத்தைக் கடக்க நம்மால் முடியுமா? பக்ஷிகளைப்போல் நாம் பறக்கவென்றால் முடியாதே.

ஆகையால் "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்றபடி ஒவ்வொருவரும் தத்தம் மதத்தை கடவுள் அருளினரென்று கூறிக்கொள்ளுவது அபிமானம் பற்றியே யன்றி உண்மையாகாதென்று தோன்றுகிதது. கடவுள் தன்னையடையவேண்டி ஒரு சமயத்தை அருளினரென்ப திண்மையேயானல் நாம் அவரை அறிவதற்கு இன்றியமையாததான நமது சரீரமும் பிரபஞ்சமும் படைக்கப்படுவானேன்? இனிச்சமயங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கொள்கைகளை உடையனவாயிருப்பது அவை அவ்வம்மத ஸ்தாபகர்களது அறிவின் ஏற்றத்தாழ்ச்சிகொண்டேயன்றி வேறல்ல. கடவுள் ஒருவரே நிர்மலர். மனிதர் எவரும் தவறுடையாரே.

"அரியகற்று ஆசற்றார்க் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு"

என்ற பொய்யா மொழியார் வாக்கே இவ்வுண்மையை விளக்கப்போதியசான்றும். ஆகவே மதங்களும் தவறுடையனவே. எம்மதமாயினும் அதிலுள்ள உண்மைகளைமட்டும் கைக்கொண்டு மற்றவைகளைக் கைவிடுதலே அறிஞர் கடன்.

ஆகவே நமது அறிவிற்கு அறிவாய் உயிருக்கு உயிராய் எங்கும் நிறைந்த கடவுளே நம்மனைவருக்கும் பிதாவென்றும் நாமெல்லோரும் அவனது குழந்தைகளாதல்பற்றிச் சகோதரர்களென்றும் எண்ணி, அவனிடத்திற் செய்யும் பிதிர் பக்தியும், நாம் ஒருவர்க்கொருவர் செய்யும் சகோதரவாஞ்சையும், உயிர்களிடத்துக் கருணையுமே சத் சமய சாரமாகும். எவவெவர் எக்கொள்கையையுடையாராயினும் அன்பின் வழிப்பட்டுய்யும்படி தெய்வம் திருவருள் பொழிக.

"அன்புஞ் சிவமுமிரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவதியாரு மறிகிலார்
அன்பே சிவமாவதி யாருமறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே".

C. S. இராமலிங்கம் பிள்ளை.

---

## நாம் உட்கொள்ளும் ஆகாரம்:—ஜீர்ணம்.

ஸ்ரீமாந் O. A. நாராயணஸ்வாமி அவர்கள்.

---

ஸிருஷ்டியில் நம்முடைய சரீரத்தைப்போன்ற விசித்திரமான யந்திரம் வேறொன்றுமில்லை. எப்படி ஓர் நீராவி யந்திரம் கரியும் விறகும் இல்லாமல் சரியாக வேலை செய்யாதோ, அது போலவே நம்முடைய சரீரமும், ஆகாரமில்லாவிடின் களைத்துப்போம்.

நாம் உட்கொள்ளும் ஆகாரம் எவ்வாறு நமக்குப் பயன்படுகிறதென்பதைக் கவனிப்போம். ஒரு பிடி சாதத்தை வாயில் போட்டுக்கொள்கிறோம். அது சாதமாகவே இருந்துவிட்டால் நமக்கு உபயோகப்படாது. ஆகையால், அது உபயோகப்படும் படியான ஸ்திதிக்கு மாற்றப்படவேண்டும். இது மாதிரி ஆகாரத்தை மாற்றுதலிற்குத் தான் ஜீரணம் (Digestion) என்று பெயர். ஜீரணத்தை உதவி செய்யும் கருவிகள் அனேகம் இருக்கின்றன. அவைகளுள் முதலாவன பற்களே. வாயில் போட்ட ஆகாரத்தை, நாக்கு, பற்களுக்கிடையே கொடுக்க, அவைகள், அதைக் கடித்து, மென்று, விழுங்குவதற்குத் தகுந்த குழம்பாக மாற்றிவிடுகின்றன.

பற்கள் குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும், ஒரே மாதிரி பதா ர்த்தங்களால் தான் ஆக்கப்பட்டிருக்கின்றன. பற்கள், மேலே, தந் தத்திலும் கடினமான எனமல் (Enamel) என்னும் பதார்த்தத்தினுல் மூடப்பட்டிருக்கின்றன. இவைகள் மேல்வாயிலும் கீழ்வாயிலும் உள்ள சதைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. பல்லிற்குள்ளே இருக் கும் ஒரு பள்ளத்தில், உரத்த ஓட்டமுள்ள நரம்புகள் வந்து சேர்கின் றன பல்லை மூடியிருக்கும், "இனமல்" என்னும் தசைக்கு உணர்ச்சி இல்லை. பல்லின் உட்புறத்திற்கு மாத்திரம் உணர்ச்சி உண்டு: ஆதலின் பல்லை தசை மூடிக்கொண்டிராவிட்டால், மெல்லும் போதெல்லாம் பல் நோவு காணும். பல்லின் வெளித்தசையைச் சுத்தியாக வைத்திரா விடின் அதற்குக் கெடுதி உண்டாகும். அது போய்விட்டால் சீக்கிரத் தில் பல் சொத்தையாகி, சகிக்க முடியாத பல்வலி காணும்; பற்களும் விழுந்துபோகும். ஆதலால் நமக்கு மிகவும் பிரயோஜனமான பற்களை எப்பொழுதும் துலக்கி சுத்தமாய் வைத்திருக்கவேண்டியது நம் கட மைகளில் ஒன்ருகும்.

சாதத்தை குழம்பாக மாற்றுவதற்குப் பல்லின் உதவி இருந்தால் மாத்திரம் போதாது. வாயிலிருக்கும் உமிழ் நீருடன் சேராமற் போனல் நாம் உட்கொள்ளும் உணவை நன்ருய் மெல்லவுங்கூடாது; இரைப்பையில் சேர்ந்து செவ்வையாய் ஜீர்ணமுமாகாது. நமது வாய்க்குள் நாக்கு, உதடுகள், மேல்வாய் ஆகிய இவ்விடங்களிலே மேல் சருமத்திற்குக் கீழ் விசித்திரமான கிரந்திகள் (Glanos); இவைகளி னின்று நீர் சுரந்து சிறிய குழாய்களின் வழியாய் வந்து வாயில் விழுந்து கொண்டிருக்கிறது; அவைகளில்லாவிடின் நமது வாய் எப் பொழுதும் உலர்ந்து மிகவும் துன்பம் விளைக்கும், போஜனம் செய் யும் பொழுது மாத்திரம் அதிக உமிழ் நீர் வேண்டியிருப்பதால், கிரந் தியிலிருந்து உமிழ் நீர் அதிகமாகச் சுரந்து வாயில் வந்து விழுகின் றது. ஒரு வேளை போஜனத்துக்கு சுமார் $1\frac{1}{2}$ ஆழாக்கு உமிழ் நீர் சுரக்குமென்று கணக்கிடப் பட்டிருக்கின்றது.

கொஞ்சநேரம் வாயில் சாதத்தைப்போட்டு மென்ருல் அதற்கு ஒரு இனிமையான ருசி உண்டாகிறது. ஏனென்ருல், உமிழ் நீருக்கு அரிசி, ரொட்டி முதலியவைகளையும், எல்லாப்பண்டங்களின் மாக்களை யும் சர்க்கரையாக மாற்றிக் கரைக்கும் ஓர் விசேஷித்த குணமுண்டு.

இம்மாதிரியாக நன்ருய்ககடித்து, குழம்பாய் மாற்றப்பட்டஆகா

ரமானது, நாக்கின் பின்பாகத்தில் ஓர் பந்தாய்ப் போயிற்கின்றது. அங்கே விழுங்கப்படும் தருணத்தில், ஓர் நரம்பு விசை சுவாசப்பைக் குப்போகும் வழியை அடைத்துக்கொள்ளவே, இப்பந்தானது அங்கிருக்கும் தசைகளால், ஓர் குழாயின் வழியாய் அன்னப்பைக்குள் (Stomach) தள்ளப்படுகிறது. இப்பந்தானது தானுகவே, வயிற்றில் விழுந்து விடுவதில்லை; அருகிலிருக்கும் தசைநார்களினுல்தான் உள்ளே தள்ளப்படுகிறது. வீதியில் வரும் வேடிக்கைக்காரர்கள, தலைகீழாய் நின்றுகொண்டும் சுலபமாய் பண்டங்களைத் தின்பதற்குக் காரணம் இதுதான்.

வயிற்றில் வந்தவுடனே, நன்ருய்க்கடிக்கப்பட்ட இச்சாதம், வயிற்றைச்சேர்ந்த நரம்புகரால் முன்னும் பின்னுமாய் தள்ளப்படுகிறது. அதே சமயத்தில் பைபோன்ற வயிற்றின் உட்புறச்சருமத்திலிருந்து'காஸ்ட்ரிக் நீர்' (Gastric juice) என்னும் ஓர் ரசம் ஊறிக்கொண்டே இருக்கும். இந்நீர் ஆகாரத்திலிருக்கும் கொழுப்புப்போன்ற அநேக பதார்த்தங்களையும் கரைத்து விடுகின்றது. உமிழ்நீரினுல் கரைக்கப்பட்ட பதார்த்தங்களும், காஸ்ட்ரிக் நீரினுல் கரைக்கப்பட்ட பதார்த்தங்களும், உடனே உட்சருமத்திலுள்ள இரத்தக்குழிகளால் உட்கொள்ளப்படுகின்றன.

கரையாத பண்டங்களெல்லாம் வயிற்றிலிருந்து 'இன்டஸ்டைன்' என்னும் ஓா குழாய்க்குள் போகிறது. இங்கு 'பைல்' (Bil) 'பாங்க்ரியாடிக்நீர்' (Pancreatic juice) என்னும் இவ்விரு ரசங்களும் இங்கே வந்து விழுகின்றன. இவைகள் ஆகாரத்தில் இன்னும் கரையாத பண்டங்களையும் கரைக்கின்றன. இவைகளிலிருக்கும் புஷ்டிதரத்தக்க பதார்த்தங்களை அக்குழியிலிருக்கும் சிறிய அங்கங்கள் கிரகித்து இரத்தமாக மாற்றிவிடுகின்றன. பாக்கியிருக்கும் ஆகாரம் இன்டஸ்டைன் குழாயின் வழியே வெளியேபோய்விடுகிறது.

இன்னும் வரும்)

O. A. Narayanan.

## சிசுவிவாகம்.

ஸ்ரீமாந் T. K. ராமபத்ரகனபாடிகள்.

நமது நாட்டிலுள்ள துர்வழக்கங்களில் சிசு விவாகம் ஒன்று. இதனால் விளையும் கேடு கொஞ்சமல்ல. இந்த துராசாரம் பிராமணர்களுக்குள் விசேஷமாய்ப் பரவுகிறது. இதைக்கண்டிக்குமுன் இவ்வழக்கமுண்டானதற்குரிய காரணங்களைக் கவனிப்போம். உலகத்தில் இறக்கிறவர்களின் தொகையைவிடப் பிறக்கிறவர்களின் தொகையதிகம். அதிலும் ஆண்குழந்தைகளைவிடப் பெண்குழந்தைகள் அதிகம். இது ஈஸ்வர சங்கல்பம். இப்படி பிறக்காமல் தடுப்பதற்கு யாராலும் முடியாது! நிற்க, பெண்ணைப்பெற்ற தகப்பன் அப்பெண்ணினாலடையும்பயன் சொற்பந்தான். அவளால் படும் கஷ்டம் அதிகம்! பெண்ணை வளர்க்கவேண்டிய பொறுப்புடன் அவளை யாருக்கேனும் விவாகம் செய்துகொடுக்கவேண்டியதும் தகப்பனது கடமை. பெண் பெரியவளாய் தன் கணவன் வீட்டுக்குப் போய்விட்டால் அவளால் பெற்றவனுக்கு ஒரு பைசாவேனும் பிரயோஜனமில்லை. இருந்தாலும் தன்னுடைய பெண்ணை நல்ல புருஷனுக்குக் கொடுக்கவேண்டுமென்னும் எண்ணம் ஒவ்வொரு மனிதனுக்குமுண்டு. தற்காலம் ஆண்பிள்ளைகள் வீண்பிள்ளைகளாயிராமல் இங்கிலீஷ் படித்து உத்தியோகஞ்செய்யத் தொடங்குகிறார்கள். "பரிக்ஷை தேறினால் பதினாயிரம் ரூபாய்க்கு சமானம்" என்பது அநேகருடைய கருத்து. அதனால் ஏழையாயிருந்தாலும் அவனுக்கு ஒரு ஏகர் நிலங்கூட இல்லாதிருந்தாலும் அவன் குரூபியாயிருந்தாலும், பெண்ணையுங்கொடுத்துபணத்தையுங்கொடுக்க அநேகர் இணங்குகின்றனர்!

வரனுக்குரிய யோக்கியதையையும் அழகையும் ஆண்மையையும் செல்வத்தையும் நற்குணத்தையும் தற்காலம் கவனிக்காமல் வித்தை ஒன்றைமட்டும் கவனித்துப் பெண்ணைக் கொடுக்கிறார்கள். அதிலும் வர வர தேசத்தில் பெண்குழந்தைகள் அதிகமாவதாலும் பரீக்ஷை தேறும் பிள்ளைகள் மிகுதியாவதாலும், இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் படிக்கிறான் என்றாலே, "பி. ஏ. பாஸானதுபோல்" நினைத்துக்கொண்டு 6-வயது பிள்ளைக்கு 3-வயது பெண்ணைக் கல்யாணம் செய்துகொடுக்கிறார்கள்! இதனால் சிசு விவாகம் அதிகமாகிறது. அநேக கிராமங்களில் இரண்டு மூன்று வயது பெண்குழந்தைகள் அரைமுடிகட்டிக்கொண்டு கழுத்தில் தாலியைத் தொங்கவிட்டுக் கொண்டிருப்பது

எத்தனை கோரமான காக்ஷி!! ஒரு சமயம் இச்சிசு மாப்பிள்ளைக்கு மாந்தம் கண்டு மரணம் நேரிட்டால் தன் பெண் ஆயிசு பரியந்தம் கைம்பெண்ணாக இருக்க நேரிடுமே' என்பதைப் பெற்றவன் கனவிலும் நினைக்கிறதில்லை! ஆதலின் 9-வயதுக்குட்பட்ட பெண்ணுக்கு விவாகம்செய் க்கக்கூடாதென்றும், அப்படிச்செய்வித்தால் அதற்கு உடைந்தையாயிருந்தவர்கள் தண்டிக்கப்படுவார்களென்றும் மைசூர் இராஜ்யத்தில் ஓர் சட்டமுண்டாயிருக்கிறது. இந்தச் சட்டத்தை நமது கவர்ன்மெண்டாரும் கவனித்தால் நம்முடைய கூக்குரல் ஒருவாறு சாந்தமாகும். சாதாரணமாக தேக தத்வ சாஸ்திரத்தையும் நமது தேசத்தின் சீதோஷ்ண நிலைமையால் உண்டாகும் சரீர பக்குவ நிலைமையையும் அறிந்தே, நமது பெரியோர்கள், "தசவர்ஷாபவேத் கந்யா அதஊர்த்வம ரஜஸ்வலா", என்று அதாவது 10-வதும் வரையில் கந்யாப்பருவமுண்டென்றும் அதன்பிறகு விவாகம் செய்யவேண்டுமென்றும் சட்டநூலில் (தர்மசாஸ்திரத்தில்) சொல்லியிருக்கின்றனர். ஆதலால் ருதுவாவதற்கு முன்தான் விவாகம் செய்யவேண்டுமென்னும் ஸித்தாந்தத்திற்கும் இதுவிரோதமில்லை; அப்படிஅநுஷ்டிப்பதால் நம்மை ஒருவரும் ஜாதிப்பிரஷ்டஞ்செய்து விடவுமாட்டார்கள். ஏனென்றால் நாம்போகிறவழி சாஸ்திரத்தை யனுஸரித்திருப்பதால் நம்மைப் பழம்புலிகள் விழுங்கிவிடா. உலகத்திலுள்ள மற்ற வகுப்பார்களைவிடக் கல்வியறிவில் பிராமணர்களே மேலானவர்கள் என்ற கௌரவம் முற்காலமுதல் இக்காலம்வரை நமக்கு ஏற்பட்டு வந்திருக்கிறது; அது முக்காலத்திலும் மாறுமலுமிருக்கலாம்! ஆனாலும், "தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன்" என்பதுபோல் ஹரிச்சுவடி தெரிந்தவன்முதல் தர்மசாஸ்திரம் பேசுவதும், இவன் சொல்வதை நாமேன் கேட்கவேண்டும் என்ற துரஹங்காரமும் நமக்குள் அதிகம் என்பதை மட்டும் நம்மால் மறைக்கமுடிய வில்லை. மறைக்கவும்முடியாது போலும். இதனால்தான் நமக்குச் சுண்டைக்காய் மூட்டை, என்றபட்டம் நிலைத்து வருகிறது. ஒருவர் 12-வயது வரை தமது பெண்ணை விவாகம் செய்துகொடாமல் வைத்திருந்தால் அவருக்குப் பலவாறு ஆசிர்வாதங்களும் வம்புமாலைகளும் அளிக்கப்படும். அதனால் "உடம்புக்குப் பால் குடியாவிட்டாலும் ஊருக்காவது பால் குடிக்கவேண்டியது அவசியமாகின்றது" ஆகவே வயதாகிவிட்டதென்றும் யார் என்ன சொல்லிவிடுவார்களோ என்றும் வயிற்றில் நெருப்பைக்கட்டிக்கொண்டு எந்த உடம்புக்காவது கந்யகா தானஞ்

செய்யவேண்டியது அவசியமாகிறது. இதுதான் சிசு விவாகத்திற்குச் சாதாரண காரணம். சாகக்கிடக்கும் சுந்திரப்பாட்டி, "குழந்தை சேதுவுக்கு ஒருதாலியைக்கட்டிக் கண்ணால் பாராமல் என் பிராணன் போகாது; ஆகையால் அடுத்தகத்து அநந்தநாராயணன் பிள்ளை அண்ணாசாமிக்குக்கொடுத்துவிடு" என்று ஒருமருந்துக்கும் அசையா பிடிவாதங்கொண்டு சொல்லும் பெரியோரின் மனத்திருப்தியை உத்தேசித்துச்செய்யப்படும் தடபுடல் கல்யாணம் முக்கிய காரணமாகும். கலமோ 2-2-0, காலமோ எதிர்ஜாமீன் மிகுந்த இருபதாவது நூற்றாண்டு; நாமோ ஏழை; இப்போதோ, நம்ம மாமாவாத்துக்கல்யாணம் நடக்கிறது இதோடே சேர்த்துக் "குஞ்சுக்கும் ஒரு தாலியைக்கட்டி நாலுபேருக்குப் பருப்புப் பரமானம் சமைத்துப் போட்டுவிட்டால், ஆச்சு கல்யாணம்!" என்று செலவுக்கில்லாமல் செய்யும் கல்யாணம் ஸர்வ ஸாதாரணமாக நடந்து வருவதாகும்! ஆனால், இன்னுமொருவித ரகஸியகாரணமிருக்கிறது. அதுதான் இந்த சிசுவிவாகத்திற்கு மூல காரணம். அதாவது "தமது உட்பிரிவுதாண்டிஸம்பந்தஞ் செய்யக் கூடாதென்பதே" இது நீங்கிவிடுமானால் இந்தச்சிசுவிவாகம் முக்காலேமூன்றுவீசம் நின்றுவிடும். ஏனெனில் அப்பொழுது மாப்பிள்ளை தேடுவதற்குக் கட்டுச்சாதம் கட்டிப்போகவேண்டாம். அந்தந்த ஜாதியைச்சேர்ந்தவர்கள் அந்த அந்த வகுப்புகளுக்குள் எதில்வேண்டுமானாலும் ஸம்பந்தஞ் செய்து கொள்ளலாம், என்ற தைரியத்தால் ஒருவரும் "பெண்ணாகவா பிறந்தது" என்று கவலைப்படமாட்டார்கள். அப்பால், பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளையும் மாப்பிள்ளைக் கேற்ற பெண்ணும் அகப்படுவது ஸர்வஸாதாரண மாகிவிடும். அதனால் வரதக்ஷிணைப் பிசாசையும் விரட்டி ஒருவாறு ரக்ஷாபந்தனஞ்செய்யலாம். வெறியன், தடியன், குடிகேடன் கூத்தாடி, குரூபி, துர்க்குணி இவர்கள் நமக்கு மாப்பிள்ளையாக மாட்டார்கல். ஆனால் நாம் இவ்வாறு சொல்வதால் எல்லாவற்றையும் கலந்துவிட விரும்புகிறோமென்றாவது இங்கே சொன்ன மனிதர்கள் தீர்க்கப் பிரம்மசாரிகளா யிருக்க வேண்டித் தேங்காயுடைக்கிறோமென்றாவது ஒருவரும் எண்ணவேண்டாம்! ஏனென்றால், நாம் பெண்ணைக் கொடுக்காவிட்டால் அவர்கள் தட்டுச்சித்தும் அரையுமாயிருக்கமாட்டார்கள். கருணாகரக் கடவுள் அவர்களுக்கும் ஏற்றபடி பெண்களை ஸ்ருஷ்டித்திருக்கிறார்! ஆதலால் நாமே வலுவில் அப்படிப்பட்டவர்களிடம் பணத்திற்காசைப்பட்டுக் கொடுக்கக்கூடாது என்றும் நமது உட்பிரிவுகள் எவ்வளவு தூரம் சாஸ்திரீயமாகுமென்று ஆராய்ந்து நல்ல குணமுள்ள மாப்பிள்ளைகளை

யும், பெண்களையும் நம்மர் அடைந்து கவலை நீங்க வேண்டுமென்றும் நமது அநாதரவாலும் கவனக்குறைவாலும் நமது மேலான வகுப்பு சீர்குலைந்து விடும்படி நாம் விட்டுவிடக் கூடாதென்றும், எண்ணில்லாத பண்டிதர்கள் நமக்குள்ளிருக்க நாம் அன்னியதேசத்திய மனிதர்களின் மூலமாக ஆசார திருத்தஞ்செய்து கொள்ள விரும்புவது அநாவசியமென்றும், பலவித நஷ்ட கஷ்டங்களுக் காதாரமான இச்சிசு விவாகம்,அநாகரிகமாகுமென்றும், ஒவ்வொரு பண்டிதரிடமும் வற்புறுத்த வேண்டுமென்பதுமே, நமது கருத்து. இனி நமது ஜாதிகளின் உட்பிரிவுகளைப்பற்றியும், அவைகளால் நாம் எவ்வளவு தூரம் நன்மையடையலாமென்பதைப்பற்றியும், அவைகளைப்பற்றி முற்கால தற்கால பண்டிதர் இருவர்களும் ஒப்புக்கொண்ட அபிப்பிராயத்தைப் பற்றியும் சாஸ்திரீயமான விவாகம் இதுவே என்பதைப் பற்றியும் சுருக்கமாக ஒவ்வொருவர் மனதிலும் படும்படி அடுத்த ஸஞ்சிகையில் எழுதுவோம்.

T. K. இராமபத்ர கனபாடிகள்.

---

## மனிதர் நிலைமை மாற்றம்.

ஸ்ரீமாந் D. அகஸ்தியலிங்கம் பிள்ளையவர்கள் F. T. S,

---

ஏ மனிதனே! உன் வாழ் நாளெல்லாம் வீணாளாயிற்றே ? உன்
ஜென்மோத்தேசம் யாது ? உனது பருவமும் அகன்றதே? ஆ?
எத்தனை நாள் தவசியற்றினால் இம்மானிட ஜென்மம் கிடைக்கும் ?
அஃதன்றோ " அரிது அரிது மானிடராதலரிது" என்றார் ஆன்றோர்.
அல்லும் பகலும் உன் வயிற்றை நிரப்புவதற்கோ நீ ஜென்மமெடுத்
தனை. அல்லது பொருள் தேடிக் கூட்டிவைப்பதற்கோ நீ பிறந்தனை.
வ தமோகுணமே! பணவாசை கொண்ட பிணமே ! இதுவோ உனது
ஜென்மப்பேறு. வயிறு கழிக்க நீ பிறந்தனையாகில் உனக்கும் சுண
ங்கனுக்கும் என்ன வித்தியாசம். சுணங்கனும் காலைமுதல் இராவரை
யும் சுடுகாடெல்லாஞ் சுற்றித்திரிந்து மாமிசம் மச்சை எலும்பு இவை
களைத்தின்று வயிற்றை நிரப்புகின்றது. நீயும் உன் சோற்றுத்துருத்
தியைத் தினம் பிரதி நிரப்புகின்றனை. அல்லது பூமிக்குப்பாரமாய்
குழந்தைகளைப் பெற்றுவிடுவதோ ஜென்மப்பேறென நீ கருதியிருப்
பது ? அஃதாயின் பன்றிகளுக்கும் உனக்கும் யாது வித்தியாசம் ?
பன்றிகளும் 10-ம் 20-ம் குட்டிகளைப் பெறுகின்றனவே. அல்லது

பணத்தைத்தேடி லோபகுணத்தால் அதை யற்பமாயினுஞ் சற்பாத்தி ரத்தில் ஈவு செய்யாமல் வைத்துக்கொண்டிருப்பதுவோ உன் ஜென்மப் பயன். அஃதாயின் இரும்புப் பெட்டிகளும் மரப்பெட்டிகளும் எவ் வளவோ பணங்களைச் சுமந்துகொண்டிருக்கின்றனவே.

அல்லது புஸ்தகங்களை அல்மாரி அல்மாரியாய் ஒருவருக்கும் பிர யோஜனப்படாமல் அடுக்கிவைத்திருப்பதோ நீ சரீரமெடுத்ததின் நோக்கம். அங்ஙனமாயின் அல்மாரிகளுக்கும் உனக்கும் வித்தியாச மென்ன? அல்லது சில புஸ்தகங்களை அங்குமிங்குந்திருப்பி சோம்ப லினால் ஒன்றையேனும் முற்றுபெறப் படித்து சிந்தனை செய்யாது விட்டு விடுவதோ நின் கருத்து. அங்ஙனமாயின் புஸ்தகங்களின் ஊடே யிருக்கும் ராமபாண பூச்சிகளுக்கும் உனக்கும் யாது வித்தியாசம்? அல்லது காலைமுதல் இராவரையும் வயிற்றுப்பாட்டுக்காக வெறும் வேலை செய்வதோ உன் கருத்து. அங்ஙனமாயின் மாட்டுக்கும் உனக் கும் வித்தியாசம் என்ன. காட்டில் நிற்கின்ற மரங்கள் கூடவும் பிறரு க்குப் பெரும் பிரயோஜனத்தைக் கொடுக்கின்றனவே. உன்னால் பிறருக்கு என்ன உதவி? ஒன்றுமில்லையே. உன்னையும் உன் பெண் சாதி பிள்ளைகளையும் காப்பாற்றுவதே பெரிதென நீ நினைப்பையாயின் அது தவறு. ஏனெனில் பகுத்தறிவில்லாத பக்ஷிகளுங் கூட அவைக ளின் குஞ்சு குட்டிகளைக் காப்பாற்றுகின்றனவே. நீ மானிட ஜென் மமல்லவோ. உனக்கு நன்மை யின்னது தின்மையின்னதெனப் பகுத்தறியுந்தன்மை வாய்ந்திருக்கின்றதே. நீ மானிட ஜென்மமெ டுத்திருப்பதின் விசேஷம் என்ன? நீ பிறருக்கும், பொதுவிற்கும் உன்னையும், உன் பணத்தையும் மற்று யாவையும் தத்தம் செய்தாலல் லாது உனக்கு ஆத்மப்பேறு கிடைப்பது எங்ஙனம்.

ஏ! பாமிசபிண்டமே! உலகத்தைக்கெடுக்கப்புகும் அவதாரமே! இன்னுங்கேட்பாயாக. உன்பேரில் என் கருணையானது ததும்புகின் றது. நீ உயிரோடிருப்பதைவிட இறப்பதே நலம். ஏனெனின் உன்னைக்கொண்டு பிறருக்கு ஒரு பிரயோஜனவுங்காணவில்லை. ஏதோ சென்ற ஜென்மத்தில் நீ செய்த நற்கருமங்களால் நாயாகவும் பேயா கவும் கண்டவர் கைகளால் அடிபட்டுத்திரியாமல் மனிதவர்க்கத்தில் ஒருவனாக நீ பிறந்தனை. இம்மானிடப்பிறவியில் நின்றும் மேற்கதி களையடைய நீ வேலைசெய்யாது கீழ்நோக்கி பக்ஷி, மிருகாதிகளாக, பிறக்கும்படி நீ வேலைசெய்வதாய்க் காணுகிறது. உன் பிரவிர்த்தியோ

பிறர் குடியைக்கெடுப்பதும் யாவருக்கும் தீங்கிழைப்பதும் ஏழைகளி டத்தில் வட்டிக்கு வட்டிசேர்த்தெழுதி அவர்கள் சொத்தை மனப்பூர் வமாய் கபடஞ்செய்துவேண்டுவதும், குடும்பங்களை மூட்டிவிட்டு சண் டை பிடிப்பதைப் பார்ப்பதும் அவர்களைக் கோர்ட்டுக்குக் கொண்டு போய் அதனால் ஆதாயம் பெறுவதும், பிறருக்கு வருந்துன்பங்களை யும் கஷ்டங்களையுங்கண்டு ஆனந்திப்பதும், நானவ்விதஞ்செய்தேன் நானிவ்விதஞ்செய்தேன் என்று உன்னை மேம்பாடாக நினைத்துக் கொள்வதுமாக விருக்கின்றனை. ஏ! மதரே நீ கேட்பாயாக, நீ உன் குழந்தைகளைக் காப்பாற்றுவதாக நினைக்கிறாய். அது தவறு. நீயில்லை யாயின் அவைகள் இறந்துவிடா. இவ்வுலகில் எதுயிராயினும் பஷ்ணி கிடக்கிறதாக நீ அறிகின்றனையோ? இல்லையே. பிபீலிகை (எறும்பு) கூடவும் சுகமாக பந்துக்களோடு காலங்கழிக்கின்றது. சிலவேளை உன் பந்துக்களுக்கு வேண்டிய சகாயங்களைச் செய்து அவர்களோடு புஜிக்கின்றோமென நீ நினைக்கலாம். ஏ! அறிவிலி! காகங்களைப்பார். காகங்கள்கூட பிற காகங்களோடும் பந்துக்களோடும் உண்ணும் போது மனிதனாயிருக்கின்ற நீ செய்வது அவ்வளவு பெரிதாகுமோ? ஆகாது. ஏ பயனற்று வாழ்பவனே! வீண்வாது புரியுஞ்சூதே! கேளாய்! இன்று நீ இறந்து போவையாயின் நின்கதி யென்ன? நின் பாடென்ன? நின் வீடென்ன? ஆலோசித்தனையோ? நீ உலகில் வசிக்க கல் மண் கொண்டு வீடு கட்டிக்கொண்டனை. நீ இறந்ததின் பிற்பாடு எவ்வீட்டில் வசிக்கப்போகின்றாய்? அதப்பனைபற்றி கிஞ்சிற்றேனும் நினைத்தனையோ? சிந்தித்தனையோ? எல்லாமறிவேனென்று நினைக்கும் ஏ அகங்காரமே! கேளாய்! நீ இனிமேல் வசிக்கப்போகும் தேவலோ கவீடும் பூலோக வீடும் நற்கருமங்களினால் ஆக்கப்படவேண்டியவை.

காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டுக்
கரும்பைவிட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற வுலகீர்!
கூடுவிட்டுப் போயினபின் னெதுபுரிவீ ரெங்கே
குடியிருப் பீரையோநீர் குறித்தறியீ ரிங்கே
பாடுபட்டீர் பயனறியீர் பாழ்க்கிறைத்துக் கழித்தீர்
பட்டதெலாம் போதுமிது பரமர் வருதருணம்
ஈடுகட்டி வருவீரே லின்பமிகப் பெறுவீ
ரெண்மையுரைத் தேனலநா னுண்மையுரைத் தனனே.

இப்போது கூறிய பாட்டில், இதுகால பரியந்தம் நீ தன்னலங்கருதி இப்போது கூறிய பாட்டில், இதுகால யரியந்தம் நீ தன்னலங்கருதி

பனம் போனபடியெல்லாம் நடந்தது சரியல்லவென்றும் மேல் நற்கதி யடைய உண்மையாய் வேலைசெய்து பிறருக்கும் பொதுவிற்கும் உழைத்து, புண்ணியத்தை சம்பாதித்து பகவானையடைய ஆயத்தம்பண்ணிக் கொண்டிருக்கவேண்டுமென்றும் காண்கின்றன. இவவாறு ஓர் துறவியானவர் ஓர் மூடாத்மாவை நோக்கிப் புகன்றார். அம்மனிதவுருவம் இம்மஹான் மொழிந்த வசனங்களெல்லாம் அனுபவத்திற்கு ஒத்திருக்கக்கண்டு தான் அதற்குமுன் செய்த கொடுங்குற்றங்கள் யாவையும் எண்ணி ஓலமிட்டழுதான். இவ்விதம் ஓலமிட்டழுதும் வியசனம் அடங்காமையால் விம்மி விம்மி அத்துறவியின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். அது காலையில் அத்துறவியானவர் கருணை பூண்டு அவனையெடுத்து ஹஸ்ததாடனஞ்செய்துரைக்கின்றார்:—ஏ புத்திரா. பயப்படவேண்டாம். உன்னை நோக்குங்கால் நீ இதற்குமுன் செய்த தீய கருமங்களை நினைத்து வியசனப்படுகிறவனாய்க் காண்கிறாய் ஒருவன் தான் செய்த சகல பாவங்களையும் எண்ணி மனவருத்தமடைந்து மேல் அவைகளைச் செய்யாதொழிவானாயின் அதுவே, மேற் நற்கதியடைய சன்மார்க்க அபிவிர்த்தியடையாளமாகின்றது. ஆகையால் நீயும் நற்கதியடைய இதுவே முதலடையாளம். ஏ மைந்தா! இன்னுங் கேளாய்! மோக்ஷமடையும் எத்தனங்களையும் வழிகளையும் குறித்துச் சில தெற்றான தாரணைகள் உன்னிடத்திலிருக்கின்றன. அவைகளை நல்ல சாஸ்திர ஆராய்ச்சிகளினாலும் பெரியோர்கள் வார்த்தைகளாலும் அறியவேண்டியது. சுமைதாங்கி நிறுத்துதல், அரளிநடுதல், அம்பலங்கட்டுதல், பேய்க்கொடை நடத்தல், கோவில்களுக்கு வழிபாடு நடத்தல், காவடி கட்டல், இவைகள் மட்டினுங்கொண்டு மோக்ஷமடைவரிது. நீ சற்குணசம்பன்னனாய் சத்காலக்ஷேபஞ்செய்து சதா சாம்பமூர்த்தியையும் பஜிப்பாயாக. ஸ்ரீமந் நாராயணனைப் பஜிப்பாயாக. நீ காணும் ஒவ்வொரு உருவங்களும் சிவமென்று நினைத்து அவைகளிடத்தில் அன்பாய் நடப்பாயாக. நீ நான் அவன் என்றுள்ள வித்தியாசங்களை ஒழிப்பாயாக. நான் உயர்ந்தவன் அவன் தாழ்ந்தவன் என்ற எண்ணத்தை மறப்பாயாக. உன் மனச்சாக்ஷி எவ்விதம் புத்தி போதிக்கின்றதுவோ அதன்படி நடப்பாயாக. அது வழிகாட்டுங்கடவுளென நினைத்து தினப்பிரதி அதை வழிபடுவாயாக. அதன் உத்தமமான புத்திபோதனைகளை அடிக்கடி நினைத்து சிந்தனை செய்வாயாக. உன் மனதினுதிக்கும் பொறாமை, டம்பம், அகங்காரம், அபிமானம். ஆசை, இவைகள் முதலியவைகளைச் சிறிது சிறிதாக மணிக்கூறாதோ

றும் ஒழித்து மனதைச் சுத்தப்படுத்தி, களங்கமற்ற கண்ணுடிபோல் ஆக்குவாயாக.

உன்னைப்பிறரிடத்திலும் பிறரை உன்னிடத்திலும் பார்ப்பாயாக. நீ சும்மா யிருக்கும்பொழுது உன் மனம் குப்பைகளிற் விழாமல் அங்குமிங்கும் காடேறுமல் பகவத் நாமஜெபஞ்செய்து கொண்டிருப்பாயாக. நல்ல புஸ்தகங்களை வாசிப்பாயாக. அறிவுடையோரிடத்துச் சந்தேகங்களைக்கேட்டு சிந்தித்துத் தெளிவாயாக. என இவ்வாறு பல புத்திமதிகளைப் புகன்று அநுக்கிரகஞ்செய்துவிட்டு தமது யாத்திரையைத்தொடங்தார். அன்றுமுதல் அம்மனிதன் அவ்விதமே நடந்து ஜீவமுக்தனுனன்.

D. அகஸ்தியலிங்கம்பிள்ளை, F. T. S.

---

# வியாபாரம்.

——:[:o:]:——

“தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலிதரும்” (திருக்குறள்)

நம்மிந்தியாவானது, நீர்வளம் நிலவளத்தையும், கல்வி, கைத்
தொழில், விவசாயம் முதலிய அங்கங்களையும் பெற்றிருந்தபோதிலும்
வியாபார விஷயத்தில் அவ்வளவு தேர்ச்சிபெற்றதாகக்காணேம். தற்
போது, இந்தியர்கள் தமது கருத்தைப் பெரும்பான்மையும், இராஜா
ங்கவிஷயத்தில் செலுத்தியிருக்கிருர்களே யன்றி வியாபாரம் விருத்தி
யடையவேண்டிய ஏற்பாடு செய்கிருர்களில்லை. விவசாயம், வியாபார
முதலிய தொழில்களை எவ்விதமாய் அபிவிர்த்தி செய்வதென்றும்,
அதனுலடையும் பிரயோஜனம் அளவற்றதென்றும், சிலதேசாபிமானி
கள் ஏற்கனவே, இந்தியாவில் ஒவ்வொரு மாகாணத்திற் கூடிவரும்
காங்கிரஸ் மஹாசபையில் ஒலமிட்டிருந்தும், மேற்படி தீர்மானங்களை
ஊர்ஜிதப்படுத்தி அமுலுக்குக்கொண்டுவருவது கஷ்டமாயிருக்கிறது.
இத் தீர்மானங்கள் அநுகூலத்திற்கு வராதகாரணந்தான் என்ன? முத
லாவது திரவியமின்மையும் ஊக்கமின்மையுமென்று தெரிகிறது. வர்த்
தகவிஷயத்தில் மேனுட்டார் சிறந்தவர்களாய் விளங்குவதற்கு முதற்
காரணம் வியாபாரக்கல்வியே. இந்தியர்களோ இத்தரக்கல்வியை

இன்னும் அசட்டை செய்திருக்கிறார்கள். அன்னிய நாட்டாரைக் கவனித்தால் அவர்கள் கலாசாலையில், விவசாயம், வியாபாரம் முதலியவைகளை தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு சிறுவர்களுக்குப் போதிக்கிறதுமல்லாமல், அக்கல்வியை முன்னிட்டுப் பிரசுரமாகும் பத்திரிகைவாயிலாயும் மேற்படி கல்வியின் பயனை அடிக்கடி தெரிவிக்கிறார்கள். இவ்விதபாடசாலையில் அந்நிய பாஷையில் தேர்ச்சியடைந்த ஐரோப்பியமாணாக்கர்கள் பிறதேசஞ்சென்று வியாபாரலாபத்தையடைவது கஷ்டமாகுமோ! திருஷ்டாந்தத்திற்கு பிரெஞ்சு ஜெர்மனி, அமெரிக்கரும் நமது ஆங்கிலேயரைப்போலவே அந்நிய பாஷையைக்கற்று பிறதேசங்களுக்குப்போய், ஊர்குடிகளுக்குவேண்டிய சரக்குகளை இறக்குமதிசெய்து அத்தேசத்தில் விளையும் உலோகவர்க்கங்கள்யாவையும் சேகரித்து சுதேயங்களுக்கு ஏற்றுமதி செய்வதைப் பார்த்துவருகிறோம்.

இப்படிச்செய்வதினால் அவர்களும் அவர்கள் தேசமும் நாளடைவாகச் செழிப்படைந்து இதரதேசத்தாரால் புகழப்படுகிறார்கள். ஆகவே எத்தேசத்தாரும் ஐசுவரியத்தையடைய வேண்டுமாயின் முதலாவது பிறதேசங்களுக்குச் சென்று அந்நியபாஷையைக்கற்று வியாபாரத் தொழிலில் மனதைச்செலுத்தவேண்டியது அவசியம். இந்தியர்களாகிய நாம் அங்கிலேயபாஷையைத்தவிர இதரமேனாட்டுப் பாஷைகளைக் கற்றுக்கொள்ள எத்தனிப்பதே கிடையாது. தற்போது இராஜரீக விஷயங்களில் கீர்த்திப்பிரதாபம் பெற்று விளங்கும் ஜப்பானியர் இவ்வளவு மேன்மையடைந்ததற்குக் காரணம் அந்நிய பாஷையைக்கற்பதினாலன்றோ? அந்நியபாஷையைத்தெளிவாய்க்கற்றுக்கொண்டாலல்லது நமது சரக்குகளை ஏனையோரெளிதாய் வாங்கவும் அவர்களிடமிருந்து பிரயோஜனமான பொருட்களை நாம் பெற்றுக்கொள்ளவும் சாத்தியப்படாது. ஆங்கிலேயர் மேற்சொன்ன கல்வியைப் பூண்டிருப்பதினாலே ஜெர்மனி கைத்தொழிற்சாலைகளில் செய்யப்பட்டுள்ள வெள்ளி பித்தளை முதலான சாமான்களை சரஸமாய் வாங்கவும் ஜெர்மனிக்கு இங்கிலாண்டில் செய்யும் இரும்பு வர்க்கங்களை ஏராளமா பனுப்பவும், இன்னும் பிராஞ்சு, அமெரிக்கா, ஜப்பான் சைனா முதலிய இடங்களிற்சென்று வாத்தகத்தைவிர்த்திசெய்யவும் அநுகூலமாகிறது. பிறதேசங்களிலிருந்து நம்பரதகண்டத்திற்கு வருவோர் முதலாவதாக வியாபாரத்திற்குவேண்டிய பாஷையைக்கற்றுக் கொள்ளுகிறார்கள். இந்தியர்கள் இங்கிலீஷ் பாஷையில் சகல சாஸ்திரங்கள் எழுதவும்

உபயோகிக்கவும் பாண்டித்யம் அடைந்திருந்தும் வியாபாரத்திற்கு வேண்டிய இதர பாஷைகள் செவ்வனே கற்றூர்களில்லை. இதுவே வியாபாரச்சீர்கேட்டிற்கு முதற்காரணம். தற்காலம் இந்தியாவில் தனவந்தர்களாயிருப்பவர்கள் தங்கள் திரவியத்தைக்கொண்டு நெல், பருத்தி, மரம் முதலியவைகளை ஏராளமாகச்சேகரித்து இங்கிலீஷ் கம்பெனி போல வர்த்தகம் செய்யப்படாதா. இன்னும் பூர்வீகத்திலிருந்தாற் போல வந்ததைப் பெற்றுக்கொண்டு திருப்தியடைந்திருந்தால் நமது தேசம் க்ஷேமப்படுகிறதில்லையே. நாம்சற்று உறக்கத்தினின்று எழுந்திருக்கும் பட்சத்தில் காருண்யகெவர்ன்மெண்டார் நமக்குவேண்டிய வுதவிபுரிவார்கள். கெவர்மெண்டாருதவியின்றி யூதர், பார்ஸீமுதலிய ஜாதியார் இதர தேசங்களில் தங்கள் வர்த்தகத்தை விர்த்திசெய்து ஐசுவரியத்தையடைந்திருக்க நாம் மட்டும் அசட்டைசெய்திருப்பது நமது பெருங்குற்றமே. ஐரோப்பியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர் இந்தியாவில் விளையும் தானியங்களின் வகைகளையும் மரஞ் செடி முதலிய வர்க்கங்களையும் பூமியின்கீழ் அமைந்துள்ள உலோக வர்க்கங்களின் லட்சணத்தையும் தெரிந்துகொண்டதால், வந்தபின் அவர்களுக்கு அனுபவமாயுண்டாகும் ஆராய்ச்சிஅனந்தமென்றுசொல் லாமலே விளங்கும். தரையினடியிற் புதைந்து கிடக்கும் இரும்புத்தக டுகளையெடுத்து மரக்கலங்கள் செய்யவும் சமுத்திரத்தின்கீழ் அசைவாடியிருக்கும் ஓர் வகை செடியினின்றும் முத்துக்களை யெடுத்து விலையுயர்ந்த ஆபரணங்களைச்செய்யவும் ஆகாய விரிவில் பரவியிருக்கு மின்சாரத்தைத் தங்கள் வசமாக்கி அநேக கருவி யந்திரங்களிலடக்கி வியாபாரம் செய்வதையும் கவனிக்கின், அவர்களது நுட்பவிவேகத் தைக்காண்பிக்கிறதல்லவா? அறிவிருந்தும் விவேகமில்லையாயின் பிர யோஜனமென்ன? இந்தியர்களில் தனவந்தர் அநேகரிருந்தும், தேசா பிமானத்தை முன்னிட்டுப் பொதுநலத்தை நாடுபவர்கள் சிலர்தான். தனவந்தர்களெல்லாம் ஏகோபித்து வியாபார கலாசாலையொன்றேற் படுத்தி, இந்திய வாலிபர்களைத்தேற்றினுல் இந்தியா திரவியத்திலும் க்ஷேமத்திலும் ஒருக்காலும் க்ஷீணதசையடையாதே. தோலைப்பத னிடவும், காப்பி, தேயிலை, கரும்புத்தோட்டங்களை செழிக்கச்செய்ய வும், பொன்சுரங்கங்களை கண்டடைந்துவிருத்திசெய்யவும், தங்களுக்கு வேண்டிய ஆடைகளையந்திரங்களின் மூலமாய்ப்பருத்தியைக்கொண்டு செய்துகொள்ளவும் கற்பிக்கும் மேனாட்டுச் சாஸ்திரங்களைப் படித்து அறிந்தாலல்லவா க்ஷேமலாபத்தை எதிர்பாக்கக்கூடும்.

ஆகையால், கைத்தொழிலுடன் காலதாமதமின்றி வியாபாரத்தைநாடினுலொழிய நாம் விருத்தியடைவது ஏலாத காரியம். அடிக்கடிகாரியம் அவலப்பட்டு சித்தியடையாமல் போவதற்குக் காரணம் ஊக்கமின்மையாதலால். “முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்” என்னும் மூத்தோர் வாக்கியத்தை முன்தள்ளி மேனுட்டாரைப்போல் ஜாதிவித்தியாசமின்றி ஒருங்குசேர்ந்து முதல் இந்தியாவின் வர்த்தகத்தைவிர்த்திசெய்தால்தான் இந்தியாவுக்கு மேன்மையும், இந்தியர்களுக்குக்கீர்த்தியுமுண்டாகுமென்பது திண்ணம். எல்லாம்வல்ல இறைவன் கருணைபுரிவாராக.

S. M. சுப்பிமரணியத்தரகனுர்,
வடசேரி.

---

## கடவுள்

---

கடவுளென்னும் பதம், செய்யுள், விக்குளென்னும் பதங்களைப் போல உள் விகுதிபெற்ற தொழிற்பெயர். கடவுள் என்பதற்கு கடத்தல் என்று பொருள். அது மன, மொழி, மெய்களை கடந்துநிற்குந் தனிப்பொருளுக்குக் காரணக்குறியாய்த் தொழிற் பெயராயிற்று.

கடவுளென்னும் சொல்லுக்கு கடத்தலென்னும் பொருளிருக்க, பெரியோர்கள் தங்களது அன்பு, பக்தி முதலியவைகளின் முதிர்ச்சியால் ஒருவகை வரம்புக்குள்ப்படுத்தி உயர்திணைப் பொருளாகவும், அஃறிணைப்பொருளாகவும், ஆண் பெண்பாலாகவும் முன்னிலையிடத்துப் பொருளாகவும் கூறுவர். அவரே திணைபால் இடமடங்கிய இலக்கணவரம்பையும் முதல், இடை, கடை முதலிய காலத்தையும் அப்பு, தேயு, முதலிய பஞ்சபூதங்களையும் கடந்து ஊனக்கண்ணுக்குத் தோன்ருப் பொருளாய் எந்நாளும் இயற்கையறிவோடு தோன்றும் இயல்புடையவர். அவர் ஆதியும் அந்தமுமில்லாதவராய் எங்கும் நிறைந்தவராய் எவையும் அறிந்தவராய் நிர்மலராய் நித்திய ஆனந்தராய் நிறைந்த வஸ்துவாய் உள்ளவர். அண்டங்களை அணுக்களாகவும் அணுக்களை அண்டங்களாகவும் மாற்றும் சர்வ வல்லமையுள்ளவர்.

இப்பிரபஞ்சமோ அவரது சிற்றில்லம்போன்றது. இந்த இல்லிற்கு அண்டகோளகையே அடைப்புச் சுவர்களாகவும், ஆகாயமே நவரத்தினங்கள் பதித்த விதானமாகவும், சூரிய சந்திரனே அதற்கு விளக்காகவும், கடலைப் பெருந் தண்ணீர்ப் பாண்டமாகவும், மேகங்களே தண்ணீர் மொண்டுவரும் பாத்திரங்களாகவும், தானியங்கள் விளையும் நிலங்களே ஆகாரக்களஞ்சியமாகவும் அமைத்திருக்கிறார்.

அருமை மக்ககளாகிய நாமோ இவ்விசித்திர வீட்டில் விளையாடித்திரியும் பொம்மைப்பிள்ளையை ஒத்திருக்கிறோம். இந்த வீட்டிலுள்ள சகல வஸ்துக்களும் இப்பொம்மைகளுக்கே செய்யப்பட்டிருக்கிறது. கைம்மாறு கருதா கார்முகில் போல யாவையும் படைத்து ஆன்மாக்களிடத்து ஒன்றையும் கருதாது அனைத்தையும் அவர்கள் பொருட்டுச் செய்யும் கருணைக்கடலாகியகடவுளது பெருமுதவிக்குக் கைம்மாறாக யாது செய்வது?

"பொன்னாற் பிரயோசனம் பொன்படைத்தாற்குண்டு
பொன்படைத்தான்
தன்னாற் பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்
டத் தன்மையைப்போல்
உன்னாற் பிரயோசனம் வேணதெல்லாமுண்டு
உன்றனக்கிங்
கென்னாற் பிரயோசனம் ஏதுண்டுகாண்
கச்சி யேகம்பனே"

என்றும் பட்டணத்தடிகள் திருவாய்மலர்ந்தருளியபடி நம்மாலவர்க்கு இயற்றுமுதவியில்லையாயினும் அவரது திருவடிகளையும் திருநாமத்தை யும் இடைவிடாது தியானிப்பதுமன்றி அவர் விரும்பியவற்றை செய்தலும் விலக்கியவற்றை நீக்கவும் பிறர் துன்பமடையக்கூட நினையாது ஒழுகுவதே அவர்பால் செய்யும் உதவியாம்.

இவ்வாறு இன்னும்சொல்லப்புகில் மிகவிரியுமாதலால் அளவினும் அறிவினும் அடக்காத அகண்ட பூரணத்தை அளவிட்டுச்சொல்லுதல் மிக்க கஷ்டமானதாலும் இதனை

"விலகரும் அருளின் மிக்கூர்
விமலனை வாழ்த்த வேண்டின்
அலகில் பல்யுகங்களே நம்
ஆயுளாய் மும்மைத் தாய

உலகமோ ருடம்பாய் அந்த
உடம்பெலாம் வாயாய் நித்தம்
பலகவி மாலை சூடிப்
பரவினும் முடியுங் கொல்லோ''

என்னும் அறிவுடையார்களின் செய்யுளாலும் அவரது பெருமை யுரைக்கத்தகாத தென்று நன்கு விளங்குகின்றது.

ஆஸ்திகர்கள் கொள்கை இதாயிருக்க சிலர் தான்றோன்றித் தம் பிராணுய் தெய்வமென்பது சுத்த சூனியம் இல்லாத ஒன்றை உண் டென்று நம்புவது ஒருவகைப் பயித்தியம். தெய்வம்நம்பியார் தேய் வதேயன்றி தேறுவதில்லை. அதைக்கண்டது யார் கொண்டது யார் என்று விதண்டாவாதம் பேசி நாத்தழும்பேறி அலைந்து திரிகிறவர் கள் நாஸ்திகர்கள். அல்லார் ஆஸ்திகரெனப்படுவர்.

நாஸ்திகர் அநேகர் ஆஸ்திகரிடத்தில் சிலகரட்டு வாக்குவாதங்கள் செய்து அவர்களது வலையில் சிக்கவைத்து அந்த விணவிற்கு விடை கொடுக்க இயலாது இயங்கவைக்கிறூர்கள். இவ்விணவிற்கு விடைய ளிப்பதைப் பார்க்கிலும் முரண்டுக்கு ஔஷதம் கொடுத்துமுரண்டை திருப்பலாமென்றும் கடல் மணலை கயிறுக்கலாமென்றும் நினைக்கி றேன். நாஸ்திகர்கள் சொல்லியவாறு கடவுளைக் கண்டவர்களில்லை யென்பது உண்மையாகவேயிருக்கக்கூடும். புகையைக்கண்டால் அதை உண்டாக்கிய நெருப்புக் கீழே உளதெனவும் ஓசையைக் கேட்டால் அதற்குக்காரணமாக இரண்டுசாமான்கள் மோதியிருக்கவேண்டுமென் றும் அறியும் அறிவுடையாருக்கு ஏன் இப்பெரிய பிரபஞ்சத்தில் அதிலுள்ள வஸ்துக்களுக்கும் அதன் தொழில்களுக்கும் ஒரு காரண கர்த்தாயிருக்க வேண்டு மென்று தெரியாதுபோய் விடுகிறது. ஒரு சிறு விளையாட்டு இடத்திற்கு கூட ஒரு கர்த்தாயிருந்து அதனைக் கூட் டுவதும் காப்பதுமானல் இபபிரபஞ்சமாகிய பெரிய இல்லிற்கு கர்த் தா இல்லாது முடியுமா? நாஸ்திகர் சொல்லும் இயற்கை என்று சாதிப்பது அவர்களது முரண்டோ அல்லது அதை அறியும் அறி வின் சக்தி குன்றினமையோ?

நிற்க ஆஸ்திகர்கள் கொள்கையையும் சற்று சீர்தூக்கி அதன் பயனை பார்க்கின் நன்ருய் விளங்கும். ஆஸ்திகர்கள் பிதாவுக்கு அடங்கி நடக்கும் பிள்ளைகள் போல் கடவுளது கட்டளையைக் கைக் கொண்டு நடக்கிறூர்கள். நாஸ்திகர்களோ கண்டது காட்சி கொண்

டது கோலமென தங்களது மனம் போன வழியில் நடக்கிறார்கள். இருவரும் இறந்துபட்ட பின்னர் நாஸ்திகர் சொல்லியபடி கடவுளில்லையானால் இருவாதியருக்கும் ஒன்றுமில்லை. ஆஸ்திகர் கொள்கைப்படி கடவுள் உண்டானால் நாஸ்திகருக்கு நஷ்டமுண்டல்லவா? அவ்வமயம் நாஸ்திகர்கெதி எவ்வாறு முடியும். ஆகையால் இருபக்கத்திற்கும் பொதுவாயும் பின்பயனை உடையதாயுமுள்ள ஆஸ்திகர் மார்க்கத்தையே அனுசரித்தல் மிக நலம்.

தி. ஆ. காந்திமதி,
நெல்லை மாணவர் தமிழ்ச்சங்கம் அவையினி.

---

## கடல்.

ஸ்ரீமாந் தி. லக்ஷ்மணபிள்ளையவர்கள் B. A.

---

கடலே—மறி
கடலே—அலை
கடலே—விரி
கடலே.

திரை யெறிந்து
நிரையின் வந்து
நுரைமறிந்த—வெள்ளமே

உரை யிறந்து
கரை யிறந்து
தரைவளைந்த—வெள்ளமே

நீல முற்று
ஞால மிட்ட
நிலையொத்த—வெள்ளமே

நாலு திக்கு
மூலைகட்கும்
ஓலமிட்ட—வெள்ளமே

கலை நிரம்ப
மலைகளென்ப
அலைகிளம்பு—வெள்ளமே

பால் நிறத்த
வானகத்தின்
சூல் நினைக்கும்—வெள்ளமே

கால் நினைக்க
எல் மனுக்கள்
மேல் நினைக்கும—வெள்ளமே

வலையர் விட்ட
பல மிதப்பும்
உலைய வெற்றும்— வெள்ளமே

அலை மடக்கில்
விழு மனுக்கள்
தலை மடக்கும்—வெள்ளமே

விண்ணுலாவும்
வெண்ணிலாவின்
றண்ணுலாவும்—வெள்ளமே

நிலையில் கொண்டல்
தொலையில் மண்ட
அலைதிரண்ட—வெள்ளமே

சூறை சுற்ற
வீறியுற்ற
பாறை யெற்று—வெள்ளமே

நூறிடத்தை
மாறிவிட்டு
வேறெடுக்கும்—வெள்ளமே

விண்ணிலாது
மண்ணிலாரும
உண்ணலாத—வெள்ளமே

சிறுவர் தங்கள்
குறுபதங்கள்
உறுதரங்க—வெள்ளமே

பொறி கலங்க
நெறியில் வங்க
மறிதரங்க—வெள்ளமே

தாய்போன்றனை தாரணியுன்னுடைய
சேய்போன்றது, தெள்ளுணவூட்டுவைபோல்
நீயே மழையாக நிலைதிரிவாய்,
தாயே யுனக்கார் சொலவீது செய்தாய்?

சந்தோஷமடைந்தனை போல்தென்றல்?
வந்தேக மலர்ந்திடுவாய், கலனைப்
பந்தாட விசைந்தெழுவாய் கடலே,
எந்தாயுனக்கார் சொலவீது செய்தாய்?

கார்சேர இருண்டுடன் மாலுமியோர்
சீர்கெடென வஞ்சியுள் சோர்தர நின்
நீர் போகிற மக்களை முக்கிடுவாய்;
யாரேயுனை இப்படி ஏவல் செய்தார்?

பூவாரி யிறைத்தது போலிரவில்
மேவாயிரமாயிர மீனினங்கள்
போவாது விண்போவது பார்த்திருப்பாய்:
நோவாதவை நோக்கப் பணித்தவர் யார்?

வல்லாரென வெண்ணி மருண் மனிதா
சொல்லாத நின்பேர்வலி சூழுவரேல்,
நில்லாதவர் வீறு நினைப்புலகில்,
நல்லாரென நாமம் விளங்குவரே.

ஒன்றான பரம்பொருள் தன்னுடைய
பொன்றாத பெருங்கருணைப் புகழை
நின்றாழி முழங்கிடுவாய், நெடுநீர்
குன்றாதலை யென்று மெழுங்கடலே.

வரைமீ துலாவி, இருள்சேரமேவி, மழைசோரவாவி மலர்தா
மரைமீ துலாவி, யளிதேனவாவி இசைபாட, நாளுமலர்கள்
விரைமீ துலாவ, விளர்பூடுவாழ முகிலீனுமாதியனையே,
தரைமீது நீடு நுரைமாலையாடு திரைமாலை சூடுகடலே.

நிறையாத கோடுபிறை சேராது நிலைபோல மாறுவலியோ
டறை கூவியாடி யலைமோதுமாறு, தெளியாத மானிடவர் தாம்
பொறையே யிலாது செயுநோவினைய மதுபோல சோகமடையும்
மறையோதலாழ குறையாத நீதி முறையோது மாதிகடலே.

புரையேது மின்றியுள போரிரண்டு புதிதாயிணைந்துனிடம்வந்
துரையாடி, அன்பு பிரியேபெனுஞ் சொலெழவே, கனிந்தவவர்மேல்
நுரையாடு தென்றல் மயல்வீச, விண்டமொழி கேள்வியுண்டகரிபோல்,
நிரையாக நண்டு, கரையோரம் வந்து, திரையாடுகின்ற கடலே.

தொலைபோகு மண்டநிரை நீடொளிர்ந்து தொடர்மாவிசும்புகுடையாய்
நிலைமாறு கொண்டல் படையாய், வளைந்த புவிசூழநின்றவரணாய்,
உலைமாறு தங்கள் புடைசேரவென்று மரசாள்வை, பொங்கு கரைமேல்
அலைபோயெழுந்து, சிலைபோல் வளைந்து, மலைபோல் மறிந்தகடலே.

வெருவாதமர்ந்து குறையாதடங்கலுயிர் வாழநின்ற பொருளாய்,
பெருவாதியன்றவவராலளந்து முடியாதனந்த முகமாய்,
திருவா, யொடுங்கலிலதாய், சுதந்தரமதாய், இடங்கொளிடமாய்,
அருவாய் நிறைந்த உருவாயவன் றனருள்போலிருந்தகடலே.

T. லக்ஷ்மணபிள்ளை.

---

# சமாசாரத் திரட்டு.

—:[:o:]:—

ஜெர்மன் சக்கிரவர்த்தி பிரதிநித்தியமும் சரீர முயற்சிக்காக 4 மைல் தூரம் நடக்கிறாராம்.

***

இந்தியா முற்றும் 10000-பேரில் 95 புருஷரும், 10 ஸ்திரிகளும் எழுதப்படிக்கத் தெரிந்தவராக விருக்கின்றனர்.

***

ஜெர்மனி தேசத்தில் நெருப்புப் பற்றக்கூடாத 50 அடி உயரமுள்ள சிம்னி காகிதத்தினால் செய்யப்பட்டிருக்கிறது.

***

பழையகாலத்தில் ஒரு அணா பெறுமதியான ஒரு பென்ஸ் சமீப காலத்தில் லண்டன்மா நகரில் ரூபாய் 1,500-க்கு விற்கப்பட்டதாம்.

***

கோடீஸ்வரனான ராக்பெல்லர் என்பவருக்கு வருஷாவரி 31 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறதாம். இதிலிருந்து 18 கோடி ரூபாய் தீர்வை செலுத்துகிறாராம்.

* * *

தக்ஷிண துருவத்தை ஆராய்ச்சி செய்வதற்காக 1915-ம் வருஷம் ஒரு கூட்டத்தார் புறப்படுவார்களென்றும் அவர்கள் 5 வருஷம் வரையில் திரும்பமாட்டார்களென்றும் தெரிகிறது.

* * *

பிரான்ஸ் தேசத்து நாணயங்களின் ஒரு பக்கத்தில் கடவுள் பிரான்ஸ் தேசத்தைக் காப்பாராக, என்று அச்சிடப்பட்டதை எடுத்துவிட பிரஞ்சு மந்திரி சபையார் தீர்மானித்தனர், ஏனோ?

* * *

ஐரோப்பாவில் சிஸிலியில் பூகம்பம் நேர்ந்து 200 பேர் கொல்லப்பட்டும் 300 முதல் 400 வரை காயப்பட்டும் போயினர், நாலு கிராமங்கள் அழிந்தும் அஞ்சு கிராமங்கள் சேதமுற்றும் போயின

* * *

1911—12 இந்த வருஷத்தில் லண்டன்மாநகரிலுள்ள தர்மஸ்தாபனங்களின் வரும்படி மாத்திரம் 82,19,011 பவுன் என்று அறிகிறோம். அப்படியானால் அந்த நகரத்தின் சொத்துக்கு அளவு கூறல் அரிது.

* * *

ஒரு ஜப்பானியன் ஜப்பான் தேசத்து உள்நாட்டிலிருந்து ஒரு பறவையின் மீதேறி ஆகாய வழியாகச் சைபீரியாவிற்குச் சென்றனன். அப்பறவை பருந்து போன்று, தீக்குருவியினும் பெரிதாக விருக்கின்றதாம்.

* * *

விநோதப்பிறவி:—திருச்சியைச் சேர்ந்த உறையூரில் ஒரு குழந்தை புலியின் வடிவம்போல் 32 பற்களும் தோன்றப் பிறந்தது. தேகமுற்றும் புலியைப்போல வார் வாராகயிருக்கிறது. குழந்தை சாந்தமாகயிருக்கிறது.

* * *

நீலகிரியிலுள்ள நார்மன் என்னும் ஒரு ஐரோப்பியத் தோட்டக்காரரும் அவருடைய மனைவியும் மகம்மதியர்களாகி விட்டார்கள் மிஸ்டர் நார்மன் அப்துல்லா என்றும், அவர் மனைவி அமினா என்றும் பெயர் வைத்துக்கொண்டார்களாம்.

* * *

பெல்ஜியம் தேசத்தில் லீஜ் என்னும் பட்டணத்தில் மிஸஸ் ஆர்ட்டினன்ஸ் என்னும் ஓர் அதிவிருத்தாப்பிய விதவை இப்பொழுது, அதாவது அவளுடைய எழுபத்தோராவது வயதில் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல ஆரம்பித்திருக்கிறாள்.

***

பைத்திய நாயைப் பரீக்ஷை செய்த டாக்டர் இறந்தார்:—கராச்சிக்கு அருகிலுள்ள மிர்பூர்காவிலிருக்கும் மிருக வைத்தியசாலையில் ஒரு பைத்தியம் பிடித்த நாயைப்பரீக்ஷைசெய்துபார்த்தார். அதனால் அந்த வியாதி வைத்தியருக்கு உண்டாகி, அவர் சமீபத்தில் இறந்து போய்விட்டார்.

***

டாக்டர் ஜீ. எம் கௌல்ட் என்பவர் சினிமெட்டக்கிராப் படங்களை அடிக்கடி பார்ப்பவர்க்கு மூளையில் ஒரு விதமாய் விகாரமுண்டாவதால், தலை நோயும் தலை சுற்றுதலு முண்டாகின்றன: கண்கூச்சமுமுண்டாகின்றது அதனை அடிக்கடி பார்ப்பது மிகுந்த தீமையை விளைப்பதா மென்று கூறுகின்றார்.

***

பெரிய ஆபீஸ்களுக்கு வரும் நூற்றுக்கணக்கான கடிதங்களைத் திறப்பதில் மிகுந்த நேரம் செலவாய் விடுகிறதாம். அதற்காக ஒரு புதிய யந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அது மிகு விரைவில் கடிதங்களைத் திறந்து விடுகிறதாம். இதில் கால் குதிரை பலமுள்ள மோட்டார் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதாம்.

***

அமெரிக்காவில் குடை இரவல் கொடுக்கும் கம்பெனி யொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. வருடவீதம் அக்கம்பேனிக்குக் குறித்த வீதமாய்ச் சிறுத்தொகைப் பணம் செலுத்தி வருகிறவர்களுக்குச் சட்டென மழை முதலியன வந்தால் அக்கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இடங்களில் குடை இரவலாய்க் கொடுக்கப்படுமாம்.

***

போலீஸ் கமிஷனர் வீட்டில் கொள்ளை:—கல்கத்தா போலீஸ் கமிஷனர் மிஸ்டர் ஹாலிடே (Halliday) வீட்டில் சில கொள்ளைக்காரர்கள் புகுந்து ஏராளமான பணத்தைக் கொள்ளை யடித்துக்கொண்டு, வீட்டிலுள்ள உடைகளை யெல்லாம் வெளியே எறிந்துவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். சந்தேகத்தின் மீது ஒருவர் கைதி செய்யப்பட்டிருப்பதாய்த் தெரியவருகிறது.

***

மதராஸ் மெயில் பத்திரிகையில் ஒரு நிருபர் சென்னையில் பால்காரர்கள் பாலுடன் சீமைச்சுண்ணும்புத் தூளைச்சேர்த்தும் கஞ்சியைக் கலந்தும் எருமை ஆடு இவற்றின் பாலைக்கூட்டியும் ஜலம் சேர்த்தும் விற்பதாக எழுதுகிறார். பக்ஷணங்கள் நிலக்கடலை எண்ணெயிலும் குசும்பா எண்ணெயிலும் செய்துவிட்டு சுத்தமான நெய்யில் செய்யப்பட்டதென்று போர்ட்டு மட்டும் போட்டுவிடுகிறார்களென்றும் குறிப்பிடுகிறார்.

***

பிரிட்டிஷ் ராஜாங்க சரித்திரத்தில் ஆகஸ்டு மாசம் மிகவும் விசேஷமான மாசம். ஆகஸ்டு மாசத்தில் தான் பங்காளம், பேஹார் ஓரிஸ்ஸா இந்த மூன்று ராஜ்ஜியங்களும் க்ளைவுக்குக் கொடுக்கப்பட்டன. ஆகஸ்டு மாசத்தில்தான் ஈஸ்ட் இந்தியன் ரெயில்வே திறக்கப்பட்டது. ஆகஸ்டு மாசத்தில் தான் டில்லி சக்கரவர்த்தியின் பெயரால் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் முதன் முதல் நாணயத்தை வெளிப்படுத்தினார்கள்.

***

16 அடி உயரமுள்ளதும் 400 ருத்தல் நிறையுள்ளதுமான ஒரு பாரி மெழுகு வர்த்தி ரோமாபுரியிலுள்ள பரிபேதுருவின் ஆலயத்தில் வைக்கப்படப்போகிறதாம். அதைச் செய்ய ரூபாய் 4500 பிடித்ததாம். அதைச்செய்தமார்கன் என்னும் கோடீஸ்வரனுடைய சித்திரப் படம் அதனடியில் வைக்கப்படுமாம். ஒருபோதும் அணைக்காவிடில் 3000 நாளுக்கு, அதாவது கிட்டத்திட்ட 9 வருஷத்திற்கு ஓய்வில்லாமல் எரிந்துகொண்டிக்குமாம்,

***

ப்ரேக் நகரத்தில் மிகுந்த வயோதிகராய, ஜோஹான் கொர்னெளஸ்கி என்னும் பெயருடைய இருவரிடத்தில் ஒரு ரத்தின கம்பளம் இருக்கிறதாம். அந்த ரத்தினக் கம்பளம் தீர்க்கதர்சியாகிய மகமத் என்பவரால் பிரார்த்தனைக் காலத்தில் உபயோகிக்கப் பட்டுவந்தது என்று அவர் ருசுப்படுத்துவதாக கூறுகிறார். அந்த ரத்தினக்கம்பளத்திற்கு 24000 பவுன் விலையளிக்கப்பட்டும், அவர் ரத்தின கம்பளத்தைக் கொடுக்கமாட்டேனென்கிறாராம்.

***

சென்ற ஐம்பது வருஷங்களுக்குள் தற்கால வித்தியா விநோத நாகரீகாபி விருத்தியில் யுத்தங்களில் கொலையுண்டவர்களின் தொகை பின்வருமாறு:—கிரிமியா யுத்தம் 7,50,000; 1859-60 இத்தாலிய யுத்

தம் 45,000. 1861-65 அமெரிக்கா தேசத்தில் உள்நாட்டு யுத்தம் 8,00,000; 1864 டென்மார்க் யுத்தம் 8,000; 1866 ஆஸ்திரியா ப்ரஷ்யா யுத்தம் 45,00; ப்ரான்ஸ் ஜெர்மனி யுத்தம் 2,15,000; ரஷ்யா-துருக்கி யுத்தம் 2,50,000; ரஷ்யா-ஜெப்பான் யுத்தம் 2,00,00; இவற்றைத் தவிர மிகப்பயங்கரமாய் நடந்த போயர் யுத்தம், இத்தாலியர் துருக்கருடன் அக்கிரமபாய்ச் செய்த யுத்தம், பேராசைப் பேயினல் கிளப்பப்பட்ட பால்கன் யுத்தம் ஆதிய யுத்தங்களிலும் ஆயிரக்கணக்கான ஆரோக்கிய திடகாத்திர யௌவன வீரர்கள் அந்தகன் உலகு ஏகியிருக்கின்றனர். வலது கன்னத்திலடித்தால் இடது கன்னத்தைக் காட்டவேண்டுமென்று போதனை செய்த மகான் இயேசுகிறிஸ்துவின் சிஷ்யர்களேயாவார். இத்தனை யுத்தங்களுக்கும் காரணமும் காரியமுமானவர்கள்.

***

அமெரிக்காவில் ஒரு வகையான செடிகளிருக்கின்றனவாம், அவற்றினிலைகள் மிக அகலமுடையனவாக விருக்கின்றனவாம். அவ்விலையின் நடுவே மாமிசத்தை வைத்தால் அஃதுடனே சுருங்கிக்கொள்கின்றதாம்; ஒரு மணி நேரம் பொறுத்து விரிகின்றதாம்: விரிந்தபோது அதில் வைத்த மாமிசம் காணப்படுவதில்லையாம். அவ்விலையில் களிமண்ணை யுருட்டிவைத்தால், அது தைத்தபடி இருங்கின்றதாம். இதனாலவை மாமிச முண்ணுஞ்செடிகளென்று தெரிகின்றதாம்

***

ஸ்பெயின் தேசத்திலுள்ள டின்ஞே என்னும் நதியின் ஜலம் மணலைக் கல்லாக்குஞ் சக்தியுடையதாம். அந்த நதிக்குள் ஒருவன் கல்லை எறிந்தால் அது அடியிற் போனவுடன மற்றக் கல்லுடன்; சேர்ந்து ஒரே கல்லாய் விடுகிறதாம். இதனால் அந்த நதியின் அடிப்பக்கம் முழுமையும் ஒரே பாறையாயிருக்கிறதாம். அந்நதியில் மச்சங்கள் வசிப்பதில்லையாம். அதன் கரையோரங்களில் ஒரு செடியும் வளர்வதில்லையாம். புதிய ஜலம் வரும்பொழுது அந்நதிக்கு ஏராளமான மணல் ஜலத்துடன் வருகிறது. அது கடலுக்குப் போவதற்குள் கல்லாய் விடுகிறதாம். அதனால் அந்நதியின் முகத்துவாரம் எப்பொழுதும் சுத்தமாயிருக்கிறது. பூகோல சாஸ்திரிகள் அந்த நதி ஜலத்தில் மணலைக் கல்லாக்குவதற்குரியசக்தி என்ன விருக்கிறதென் க்ண்டுபிடிக்க நீண்ட காலமாக முயன்றுவருகின்றனர்.

# WANTED.

Co-Editors from all the Tamil Districts in South India on monthly pay.

For conditions, salary &c.,

Apply sharp to
The Managing Editor
**TAMILIAN**
**TRIVANDRUM.**


## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

வருஷம் முடிவாகப் போகிறபடியால் இதுவரையிலும் சந்தாத்தொகை செலுத்தாத சந்தாதார்களெல்லாம் இன்னும் தாமதமின்றி அனுப்பிஉதவிபுரிவார்களென்று நம்பப்படுகிறது. அடுத்த பத்திரிகை வெளிவருமுன் அனுப்பாதவர்களுக்கெல்லாம் ஆனிமாதப் பத்திரிகை வி. பி. மூலம் அனுப்பப்படும்,

அடுத்த ஆண்டு சந்தாதாராயிருக்கப் பிரியமில்லாதவர்கள், நம்மை வீண் நஷ்டத்துக்குள்ளாக்காமல் அவ்விவரத்தை முன்னாடியே தெரிவிக்க விரும்புகிறோம்.

பத்திராதிபர்.